வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 03 07.01.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 33 பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433 076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

## இந்திய பிரதமருக்கான கடிதம்

# வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளின் தலைவர்கள் மட்டும் ஒப்பமிட்டனர்!

## நாளை இந்திய தூதரகத்திடம் கையளிக்க திட்டம்



கொழும்பு, ஜனவரி 07

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று மாலை கையொப்பமிட்டார்.

வடக்கு - கிழக்கு தமிழ் கட்சிகளின் தலைவர்களின் கையொப்பங்களுடன் மாத்திரமே அனுப்புவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை ஏற்கனவே 'ஈழநாடு' தெரிவித்திருந்தது போல, தமிழ்த் தேசியக் கட்சிகளின் கையொப்பங்களுடன் இந்தக் கடிதம் அனுப்பப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. 15

## டொலருக்கு 240 ரூபாயை அரசு வழங்க வேண்டும்!

### அமைச்சர் நிமல் சிறிபால

கொழும்பு, ஜன. 07

வெளிநாட்டு தொழிலாளர்கள் அனுப்பும் டொலர்களுக்கு 240 ரூபாய் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எத்தனை இலட்சம் பேரை வெளிநாட்டு தொழிலுக்கு 15

## விவசாய அமைச்சரும் மாற்றப்படுகின்றார்?

### திங்களன்று அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, ஜன. 07

அமைச்சரவை மாற்றம் எதிர்வரும் 10ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் போது விவசாயத் துறை உட்பட பல 15

## மாகாண சபையை பலவீனப்படுத்தவே கிழக்கு ஆளுநர், அதிகாரிகள் முயற்சி!

### சாணக்கியன் எம். பி. குற்றச்சாட்டு

கல்முனை, ஜன. 07

"மாகாண சபை முறைமையை பலவீனமாக்க வேண்டும் என்ற விடயத்தில் மிகவும் அக்கறையாக கிழக்கு மாகாண ஆளுநர் தொடக்கம் அதிகாரிகள் சிலரும் இருக்கின்றனர் என்பது நிதர் சனமான உண்மை.", என்று இரா. சாணக்கியன் எம். பி. கூறியுள் 15

### திருமலை எண்ணெய் குதங்கள்

## கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஒப்பந்தம் நேற்று கைச்சாத்து

கொழும்பு, ஜன. 07

திருகோணமலை எண்ணெய் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் நேற்று மாலை கைச்சாத்திடப்பட்டது.

திறைசேரி செயலாளர், காணி ஆணையாளர் நாயகம், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம், மற்றும் ட்ரிங்கோ பெற்றோலியம் ரேமினல் லிமிட்டெட் ஆகியவற்றின் 15

## ஜனாதிபதியின் உரை மீது விவாதம் நடத்த வேண்டும்

### கோரிக்கை விடுக்கிறார் ரணில்

கொழும்பு, ஜன. 07

பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படும் போது ஜனாதிபதி நிகழ்த்தவுள்ள கொள்கைப் பிரகடன உரை தொடர்பாக ஒத்திவைப்பு விவாதத்தை நடத்து மாறு முன்னாள் 15

## நாட்டில் 20 சதவீத உணவகங்கள் மூடல்

கொழும்பு, ஜன.07

வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு என்பன காரணமாக, நாட்டில், 20 சதவீதமான சிறு உணவகங்கள் மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

## தேசிய பால் உற்பத்தி 20 வீதத்தால் வீழ்ச்சி!

கொழும்பு, ஜன. 07

கால்நடைகளுக்கு போதிய தீவனம் கிடைக்காமையால் நாட்டின் தேசிய பசும் பால் உற்பத்தி 20 சத வீதத் தால் குறைவடைந்துள்ளது என்று தேசிய கால்நடை அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. 15

## ஆரியகுளத்தில் மதங்களை திணிக்க முற்பட வேண்டாம்

### ஆளுநருக்கு சிவாஜிலிங்கம் பதில்

யாழ்ப்பாணம், ஜன. 07

ஆரியகுளத்தில் மதங்களை திணிக்க முற்படக் கூடாது அவ்வாறு மதங்களை திணிக்க முற்பட்டால் அந்தியேட்டி அஸ்தியை கரைக்க தமிழ் மக்கள் முற்படுவார்கள். வீணாக இதனை பிரச்சனையாக்க வேண் 15

## யாழ். சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டமை கவலை தருகிறது!

### யாழ். வந்த அர்ஜுன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளமை கவலை அளிக்கிறது என்று முன்னாள் போக்குவரத்து விமான சேவை 15



## இனப் பிரச்னைக்கு சமஷ்டி தீர்வாகாது



### ஜே. வி. பி. தலைவர் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 07

நாட்டின் இனப் பிரச்னையை சமஷ்டி முறைமை மூலம் தீர்க்க முடியாது. தங்களுக்கு சமஷ்டியில் நம்பிக்கையும் இல்லை என்று கூறியிருக்கிறார் ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கா.

அத்துடன், இறுதிப் போர் காலத்தில் எங்கள் 15

## எம்.பி. ஒருவருக்கு புலனாய்வு தகவல் எவ்வாறு கிடைத்தது?

### கேள்வி எழுப்புகின்றார் சுசில்

கொழும்பு, ஜன. 07

'புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவல்களின் அடிப்படையில்தான் சுசில் பிரேமஜயந்தவை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்தார்' என பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராட்சி தெரிவித்திருந்தமை தொடர்பில் அரசாங்கம் உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் 15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது…!

அறுபதுகளின் பிற்காலத்தில் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் இரண்டு பிரதான கட்சிகள் அரசியலில் மல்லுக்கட்டின.

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும், தந்தை செல்வா என்றறியப்பட்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் அரசுக் கட்சியுமே அவை.

அந்தக் காலத்தில் சட்டத்துறையில் கொடிகட்டிப் பறந்த ஜீ.ஜீ., கொழும்பில் வாழ்ந்தவர். தேர்தல் காலங்களில் மாத்திரம் யாழ்ப்பாணம் வந்து அரசியல் செய்வார்.

யாழ்ப்பாண தேர்தல் தொகுதியில் போட்டியிடும் அவர் வீடுவீடாக சென்று பிரசாரம் செய்யும்போது நேராக குசினிக்குள் சென்றுவிடுவாராம்.

ஐந்து வருடங்களுக்கு ஒருதடவையே தனது தொகுதிக்கு வரும் ஜிஜி, வீடுகளுக்கு செல்லும்போது வீட்டின் பிரதான வாசல் எது, குசினி எது என்று தெரியாததாலேயே அவர் அப்படிச் செல்வதாக தமிழ் அரசுக்காரர்கள் அந்தக் காலங்களில் நகைச்சுவையாக சொல்வதுண்டு.

அந்த நகைச்சுவைதான் இப்போது அந்த அறிக்கையை பார்த்ததும் ஞாபகத்திற்கு வந்தது.

வல்வெட்டித்துறையில் வருடாவருடம் நடக்கும் பட்டத்திருவிழாவில் இம்முறை விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கலந்துகொள்ளவிருக்கிறார் என்றும், அதனை கண்டிப்பதாகவும் தெரிவித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், செல்வராசா கஜேந்திரனும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர்.

வல்வெட்டித்துறை என்பது எப்போதும் தமிழ்த் தேசிய உணர்வில் ஊறிய மண். தமிழீழ விடுதலையை வலியுறுத்தி தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமாகிய போதும் அதில் முக்கிய பங்காற்றியவர் ஞானமூர்த்தி ஐயா. பின்னர் வல்வை மண் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கிய பங்கு இங்கு குறிப்பிட்டால் மாத்திரமே தெரியும் என்பதல்ல.

அத்தகைய பெருமைகள் மிக்க மண்ணில் நடக்கும் இந்த பட்டத்திருவிழாவிற்கு தமிழ் மக்கள் மீது போர்க் குற்றம் புரிந்த ஒருவரை அழைப்பதா என்றே இவர்கள் இருவரும் பொங்கி எழுந்திருக்கின்றனர். நியாயமான கோபம்தான். ஆனால், முதலில் நாமல் அந்த பட்டத் திருவிழாவிற்கு அழைக்கப்படவில்லை என்றும் அவரது விளையாட்டுத்துறை அமைச்சின் ஆதரவு மட்டுமே பெறப்பட்டதாகவும் தெரியவருகின்றது. இப்போது கொரோனா காரணமாக இம்முறையும் விழாவே ரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

இது அல்ல இங்கே நாம் குறிப்பிட வருவது, இந்த பட்டமளிப்பு விழாவை ஒருதடவை மட்டுமே ஊர்க் குருவி நேரில் சென்று பார்த்து ரசித்திருக்கிறார். அவர் அந்த ஒரேயொரு விழாவில் கூட, அப்போதைய அமைச்சராக இருந்த (இன்றும் அவர் அமைச்சர்தான்) மஹிந்த அமரவீர கலந்துகொண்டிருந்தார்.

இரண்டாயிரமாம் ஆண்டிலிருந்து மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒரே அணியில் அரசியல்பயணம் செய்யும் மஹிந்த அமரவீரவும் அம்பாந்தோட்டை மண்ணிலிருந்து மஹிந்தருடன் அரசியல் செய்பவர். இறுதிக்கட்ட யுத்தம் நடந்தபோதும் அரசில் இடம்பெற்றிருந்த ஒருவர். ஆனால், நாமல் ராஜபக்ஷ, யுத்தம் நடந்தபோது அரசியலுக்கே வந்திருக்கவில்லை. தந்தை 'அரசனாக' இருந்தபோது 'இராசகுமாரனாக' தனது வாலிப வயதை அனுபவித்துக்கொண்டிருந்த ஒருவர்.

அவர் வருவதை எதிர்க்கின்றபோது அதற்கு முன்னதாக மஹிந்த அமரவீர கலந்தகொண்டபோது எங்கே இருந்தார்கள் எமது தலைவர்கள் என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை.

அதுமட்டுமல்ல, இறுதி யுத்தத்தை நடத்திய கட்சி ஒன்றின் பிரதிநிதி ஒருவரையே வல்வெட்டித்துறையை உள்ளடக்கிய தொகுதியில் தமது பிரதிநியாக மக்கள் தெரிவுசெய்ததையும் அவர்கள் இலகுவாக மறந்துவிடுகின்றனர்.

ஜீ.ஜீ தேர்தல் பிரசாரத்திற்காக வந்துசெல்வதுபோல அவ்வப்போது அறிக்கை வெளியிடுவது மாத்திரம் அரசியல் அல்ல.

**- ஊர்க்குருவி**

## ரூபவாஹினி தலைவர் பதவி விலகல்

கொழும்பு, ஜன. 07

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரெஜினோல்ட் கூரே நேற்று வியாழக்கிழமை தமது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

தனது அலுவலகம் மற்றும் உத்தியோகப்பூர்வ வாகனத்தைக் கையளித்துவிட்டு ரூபவாஹினிக் கூட்டுத்தாபன வளாகத்தை விட்டு அவர் வெளியேறினார்.

அரச ஊடக நிறுவனங்கள் மற்றும் உயர் நிறுவனங்களில் உயர் பதவிகளில் மாற்றங்கள் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதையடுத்தே தமது பதவி விலகல் கூரே வழங்கினார்.

இதேவேளை, பதவி விலகிய கூரே தேசிய நூலகத்தின் தலைவராக நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிய வருகின்றது.

(ஐ)

## 'யாவர்க்கும் நலம்' கருத்தமர்வு நாளை

யாழ்ப்பாணம், ஜன. 07

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு பிரதி சனிக்கிழமைகளில் நடத்தும் 'யாவர்க்கும் நலம்' மெய்நிகர் வழி நிகழ்வில் நாளை சனிக்கிழமை "சிறுநீரக நோய்களும் சமுதாய சுமைகளும்" எனும் தலைப்பில் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெறவுள்ள இந்தக் கருத்தமர்வில் விரும்பிய அனைவரும், சூம் செயலி மூலம் 899 8528 2023 என்ற அடையாள எண் மூலம் 354485 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)



## வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதியாக இளஞ்செழியன் நேற்று பதவியேற்றார்!

வவுனியா, ஜன. 07

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அவருக்கு வவுனியா நீதிமன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணிகள் அமோக வரவேற்பளித்தனர்.

நீதிச் சேவையை வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்த மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் சேவையில் 25 வருடங்களை எட்டியுள்ள நிலையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக மீள வந்துள்ளமை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற பதிவாளர் மீரா வடிவேற்கரசன் தலைமையில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். (ஐ)

## மட்டு. கொக்குவிலில் வீடு தீக்கிரை; பெண்கள் உட்பட எழுவர் கைது!

மட்டக்களப்பு, ஜன. 07

கொக்குவில் - பாலைமீன் மடுவில் வீடு தீக்கிரை யாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இரு பெண்கள் உட்பட 7 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

புதுவருட தினமான கடந்த முதலாம் திகதி சனிக் கிழமை மதுபானம் அருந்திய இரு குழுவினரிடையே ஏற்பட்ட தர்க் கம் மோதலாக மாறியிருந்தது. இதில் ஒருவர் படுகாயமடைந்திருந்தார்.

இந்த நிலையில், இந்த சம்பவத்துடன் தொடர்பு டைய நாகநாதன் நவநீதனின் என்பவரின் வீடு மறுநாள் அதிகாலை தீக்கிரையாக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் இரு பெண்கள் உட்பட 7 பேரை நேற்று வியாழக்கிழமை கைது செய்தனர்.

இவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மரண அறிவித்தல்

### பிரான்சிஸ் இராசநாயகம் ரெயினாவைலட் (குஞ்சு)



யாழ். கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் சார்சலை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் இராசநாயகம் ரெயினாவைலட் ( குஞ்சு) அவர்கள் 05.01.2022 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற அல்பிரட் - திரேசம்மா தம்பதியரின் மகளும், பிரான்சிஸ் இராசநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், கட்பேட் (யாழ்ப்பாணம்) காலஞ்சென்றவர்களான அருளம்மா, மைக்கல்(சிங்கம்), மேரிஆன் ஆகியோரின் அன்பு சகோதரியும், சுரேஸ், றமேஸ், சுரேந்தினி, யுனேஸ், ரமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமணவாளன், ரேணுகா, சாமினி, சாமினி(டோல்), தயாளன் ஆகியோரின் அன்பு மாமியாரும், றஞ்சா, அன்ரன், ஜொய்சி,கெனமன் காலஞ்சென்றவரான சாந்தி ஆவர்களின் அன்பு குஞ்சன்ரியும்(சின்னமா) கலா,கருணா,அனற் (சின்னபவுண்), சீதாஞ்சலி(சூட்டி), பிரபாகரன் காலஞ்சென்றவரான மரினா அவர்களின் அன்பு அத்தையும்(குஞ்சுமாமி) கீர்த்திகா,கெவின், ஜோயல்,ஸ்ரெபான், மதுமிதா, ஆர்த்திகா,ரெனிசியா,அக்செல்,சேன்,சோந்திறின்,பிரையான்,யக்ளோன்,அலான்,செர்லின் ஆகியோரின் அன்புப் பேத்தியும், அயனா, கைலன்(லீமா),ஆதியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| **சுரேஸ்:** | +33 620 90 31 14 |
| **றமேஸ்:** | +33 662 23 91 67 |
| **சுரேந்தினி:** | +33 663 00 84 18 |
| **யுனேஸ்:** | +33 750 60 14 34 |
| **ரமணி:** | +33 662 35 42 14 |

தகவல்:
**பிள்ளைகள்**

ஈழநாடு
Eelanadu
07.01.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## முரண்பாடுகளின் முதல் தலை சரிந்தது?

அரசாங்கத்திற்குள் அண்மைக்காலமாக ஏற்பட்டுவந்த முரண்பாடுகளின் விளைவாக, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கப்பட்டுள்ளார். சுசில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் பொதுவெளிகளில் விமர்சனங்களை வெளியிட்டு வந்த ஒருவராவார். அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படலாம் என்னும் செய்திகளுக்கு மத்தியிலேயே சுசில் பதவிநீக்கப்பட்டுள்ளார். புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே, அவரின் பதவி பறிப்பு இடம்பெற்றதாக, பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார். புலனாய்வு பிரிவினர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை, கண்காணிக்குமளவிற்கு அரசாங்கத்திற்குள் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்றனவா?

அரசாங்கம் தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றது. பொருளாதார சரிவு தொடர்ந்தும் பெரும் பிரச்னையாக உருவெடுத்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், பொதுஜன பெரமுனவின் பங்காளிகள் அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றனர். அரசாங்கம் பொறுப்பாக செயல்படவில்லை என்று மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாக விமர்சித்து வருகின்றார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவின் பதவி நீக்கம் இடம்பெற்றிருக்கின்றது.

அதேவேளை, பங்காளிக் கட்சிகள் எவ்வேளையிலும் காலை வாருவார்கள் என்றவாறான கருத்துக்களை மொட்டு அணியினர் தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றனர். இதனால் - மொட்டு அணியினருக்கும் பங்காளிகளுக்கும் இடையில் தொடர்ந்தும் விரிசல்கள் அதிகரித்துவருகின்றன. இந்த நிலையில், அவர்கள் ஒரு நல்ல வாய்ப்புக்காக காத்திருக்கலாம். இவ்வாறானதொரு நிலையில்தான் அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்த மொட்டு அணியினர் முயற்சிக்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்தை கைப்பற்றியதிலிருந்து, தென்னிலங்கை அரசியல் இவ்வாறான உள் - முரண்பாடுகளின் களமாகவே இருந்துவருகின்றது. ராஜபக்ஷ அணிக்குள் நிலவிய உள் முரண்பாடுகளின் விளைவாகவே மைத்திரிபால சிறிசேன வெளியில் வந்தார். 2015இல் ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் ஏற்பட்ட புதிய அரசியல் சூழலும் - அதிக காலம் நீடிக்கவில்லை. மீளவும் கொழும்பு, ரணில் - மைத்திரி மோதல் களமாக உருமாறியது. ஆட்சி மாற்றம் தொடர்பில் அதிக நம்பிக்கை வைத்திருந்தவர்கள் ஏமாற்றமடைந்தனர். ரணில் - மைத்திரி அணி மோதலானது, போன, ராஜபக்ஷக்களுக்கு செங்கம்பளத்தை விரித்தது.

மிகவும் பலமான நிலையிலிருப்பார்கள் என்று நம்பப்பட்ட, ஆனால், இதன் பின்னரும் உள்மோதல்கள் ஓயவில்லை. பஸில் ராஜபக்ஷவின் மீள் பிரவேசத்தை தொடர்ந்து, மொட்டு அணிக்குள்ளும் பிளவுகள் ஏற்பட்டது. மைத்திரி காலத்து உள் - மோதலுக்கான அரசியல் களம் மீளவும் நீறுபூத்த நெருப்புப் போல் காணப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எவ்வாறான சிக்கல்கள் காணப்பட்டதோ - அதற்கு சற்றும் குறையாத வகையில் இப்போதும் நிலைமைகள் காணப்படுகின்றன. நபர்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், அடிப்படையான அரசியல் சிக்கல்களின் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. முன்னர் மஹிந்த இருந்த இடத்தில் இப்போது கோட்டாபய ராஜபக்ஷ இருக்கின்றார். அவ்வளவுதான் வேறுபாடு. உள்மோதல்களின் முதல் தலை தற்போது விழுந்திருக்கின்றது. இன்னும் பல தலைகள் விழலாம்.

# இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு யாழ். பல்கலையில் நடைபெறுகிறது

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட இளங்கலை மாணவர்களுக்கான முதலாவது ஆய்வரங்கு எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

'சமத்துவம், சமநீதி மற்றும் அபிவிருத்திக்கான மானுடவியல் சமூக விஞ்ஞானம்" எனும் தொனிப்பொருளுடன் முன்னெடுக்கப்படும் இந்த ஆய்வரங்கில் கடந்த வருடம் கலைப் பட்டதாரிகளாக வெளியேறிய சுமார் 100 மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நிகழ்வுகளை நிகர்நிலையிலும் ஒளிபரப்புவதங்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடகப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

இந் நிகழ்வு தொடர்பில் ஊடகங்களினூடாகப் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக விபரிப்பு நேற்று காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. இதன் போது கலைப் பீடாதிபதி பேராசிரியர் ஊடகங்களுக்கு விளக்கமளித்தார். அவர் வெளியிட்ட முக்கிய தகவல்கள் வருமாறு:

இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்தில் கலைத்துறை அதாவது சமூக விஞ்ஞானம் மற்றும் மானுடக் கற்கைகள் கற்பிக்க ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடத்துடன் நூறு ஆண்டுகள் கடந்துவிட்டன. இலங்கையில் பல்கலைக்கழக கல்வி குறித்து சிந்தித்த இலங்கைக் கல்விமான்கள் தேசிய அடையாளம், பண்பாடு மற்றும் மரபுத் தொடர்ச்சிகள் குறித்து அதிகம் அக்கறை எடுத்திருந்த காரணத்தினால் இலங்கையில் விஞ்ஞானம் சார் கற்கைகள் வளர்ச்சியடைந்தமைக்கு மேலாக கலைத்துறை சார்ந்த சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதப் பண்பியல் கற்கைகள் அதிகம் வளர்ச்சியுற்றன.

பல்கலைக்கழகங்களில் பிரதான பணிகளாக மூன்று விடயங்கள் முதன்மைப்படுத்தப் படுகின்றன. கற்பித்தல், ஆராய்ச்சி கலாசாரம் ஊடான அறிவுப் பரவலாக்கம் மற்றும் சமூக ஒன்றிணைவு என்பனவே அவையாகும். இவ் விடயங்களை எய்தும் அல்லது வழங்கும் முதன்மைத் தளமாகவிருப்பவை பல்கலைக் கழகங்களால் நடத்தப்படும் ஆய்வுமாநாடுகள் ஆகும். இவற்றுள் பல்கலைக்கழக மாணவர்களை மட்டும் முழுமையாக ஆய்வாளர்களாக கொண்டு நடத்தப்படும் ஆய்வு மாநாடுகள் பல வகைகளில் முக்கியத்துவமிக்கன. இந்தப் பின்னணியில் 1ST UNDERGRADUATE RESEARCH SYMPOSIUM IN ARTS – 2021 எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட இளங்கலை மாணவர்களுக்கான முதலாவது ஆய்வரங்கு எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. "Humanities and Social Sciences for Equality, Justice and Development" அதாவது சமத்துவம், சமநீதி மற்றும் அபிவிருத்திக்கான மானுடவியல் சமூக விஞ்ஞானம் எனும் மகுடத்துடன் முன்னெடுக்கப்படும் இவ் ஆய்வரங்கில் கடந்த வருடம் கலைப் பட்டதாரிகளாக வெளியேறிய மாணவர்களின் 100 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

கலைப் பீடாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள இவ் ஆய்வரங்கில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். மாநாட்டின் சிறப்பு அம்சமாக கைலாசபதி கலையரங்கில் காலை நடைபெறும் அங்குரார்ப்பண நிகழ்வில் திறவுரைகளை பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் முன்னாள் தலைவரும் தகைசார் பேராசிரியருமான பேராசிரியர்.வ.மகேஸ்வரன், அமெரிக்காவின் ஸலிபெரி பல்கலைக்கழக பேராசிரியர்.எஸ்.ஜ.கீதபொன்கலன், கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி சாந்தி செகராஜசிங்கம் மற்றும் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.எஸ்.ஜெயசங்கர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். மாலை அமர்வில் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட பன்னிரு ஆய்வுத் தடங்களில் ஆய்வுக் கட்டுரைகள் முன்வைக்கப்படவுள்ளன. இவ் ஆய்வுத் தடங்களை துறைசார் பேராசிரியர்கள் தலைமை தாங்கவுள்ளனர்.

இன்றைய உலகப் பெருந்தொற்றுக் காலப்பகுதியிலுள்ள பல்வேறு நடைமுறை சார் சவால்களைத் வெற்றிகரமாக முகாமை செய்து எமது பீடம் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை 2021 இல் முன்னெடுத்திருந்தது. அதன் உயர் அடையாளமாக இந்த ஆய்வரங்கு நடைபெறுகின்றது. வருடம் தோறும் எமது பீடத்தில் சமூகவிஞ்ஞானம், மனிதப்பண்பியல், ஆற்றுகைக் கலைகள் மற்றும் காண்பியக் கலைகள் உள்ளிட்ட 26 கற்கைப் பரப்புகளில் ஏறக்குறைய 400 ஆய்வுகள் இளங்கலை மாணவர்களால் முன்னெடுக்கப்படுகின்றன.


எமது பீடத்தில் நீண்ட காலமாகவே இத்தகையதொரு ஆய்வரங்கை நடத்த வேண்டும் எனும் எண்ணக் கருவாக்கம் இருந்தபோதும் பல தவிர்க்க முடியாத பின்னணிகளில் இதுவரை அது சாத்தியமாகவில்லை. ஆனால் இன்று விதையிடப்படும் இவ் ஆய்வரங்கு எதிர்காலத்தில் வருடம் தோறும் நடைபெறவுள்ளதுடன் எமது இறுதியாண்டு மாணவர்கள் தமது ஆய்வு முடிவுகளைச் சமூகப்பரவலாக்கம் செய்யும் வாய்ப்பையும் வழங்கும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் சமூகம் சார்ந்த பொறுப்பை பட்டதாரிகள் மட்டத்தில் நிறைவேற்றும் ஒரு தளமாக இவ் ஆய்வரங்கு அமைகின்றது. அத்துடன் எமது பட்டதாரிகள் ஆய்வுக் கலாசாரத்துக்குள் தம்மை புகுத்திக்கொள்ளவும் இது துணை செய்யும். கலைப்பீடம் கற்றல் கற்பித்தல் மற்றும் ஆய்வுக் கலாசாரத்தில் காண்பித்து வரும் அதியுன்னதமான செயற்பாட்டுக்கு இவ் ஆய்வரங்கு ஒரு முக்கிய தளமாக அமைகின்றது.

ஆர்வமுள்ள எவரும் இவ் ஆய்வரங்கில் பார்வையாளர்களாக கலந்து கொள்ள முடியும். குறிப்பாக பாடசாலைகளில் உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் பங்கு பற்றும் போது பல்கலைக்கழகங்கள் குறித்த அவர்களது சிந்தனை இன்னும் ஒரு படி மேலே மேம்படும். அத்துடன், பல்கலைக் கழகங்களின் ஆய்வுச் செயற்பாடுகள் குறித்து ஆர்வமுள்ள ஆற்றலாளர்களும் கலந்து கொள்வதனை வரவேற்கின்றோம்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜனவரி - 07 வெள்ளிக்கிழமை**
**பிலவ வருடம் - மார்கழி - 23**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 9.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | பஞ்சமி |




**மேடம்**
நல்ல ஆதாயங்களும், பாராட்டுகளும் கிடைத்து மகிழ்வீர்கள். பெரியவர்களின் கருத்தை அனுசரித்து செல்வது மிகவும் நல்லது. உழைப்பு அதிகரிக்கும். தொழிலில் லாபம் கூடுதலாக கிடைக்கும்.

**இடபம்**
மேலதிகாரிகள் அனுசரனையாக நடந்து கொள்வர். நல்ல திருப்பங்கள் உருவாகும். பிரச்னையில் இருந்து விடுபடுவீர்கள். பயணம் செல்ல நேரிடலாம். தொழிலில் இருந்த போட்டிகள் விலகும்.

**மிதுனம்**
பழைய முதலீடு ஒன்று திடீர் லாபம் தரும். பண வரவு அதிகரிக்கும். பங்குச் சந்தை லாபம் தரும். மற்றவர்களிடம் கவனமாகப் பேசுங்கள். தீய நட்பு வேண்டாம்.

**கடகம்**
பிறரது பிரச்னையில் தலையிடாமல் இருப்பது நல்லது. உங்கள் மீது வீண் பழிச்சொல் ஏற்படுவதற்கான வாய்ப்பைத் தவிருங்கள். சுபச்செலவு உண்டு. உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்**
வாகனங்களில் செல்லும் போது மிகுந்த கவனம் தேவை. பணியாளர்கள் வளர்ச்சி பெற சூழ்நிலைகள் உதவியாக இருக்கும். உழைப்பு அதிகம் தேவைப்படும். பலன்களும் நன்றாக இருக்கும்.

**கன்னி**
நல்லவர்கள் மூலமாக நடக்க வேண்டிய செயல் நிறைவேறும். தாயாருக்கு ஏற்பட்ட சிரமத்தை நீக்குவீர்கள். பரபரப்பு கூடும். உங்களது வார்த்தைகள் மூலமாக நன்மையும் லாபமும் வரும்.

**துலாம்**
யோகமான நாள். நண்பர்களுக்கு நன்மை செய்வீர்கள். உடல் நலத்தில் கவனம் செலுத்தினால் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியான சூழ்நிலை உண்டு. சுப நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும்.

**விருட்சிகம்**
உடல் ஆரோக்கியம் மேம்படும். உங்களது பேச்சில் நிதானம் வரும். யாரிடமும் கருத்து வேற்றுமை ஏற்படாமல் சமாளிப்பீர்கள். துணிச்சல் காரணமாக எதிரிகளை வென்று மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு**
உடல்நிலையில் கூடுதல் கவனம் செலுத்த வேணடும். குடும்பத்தினருடன் அதிகம் விட்டுக் கொடுத்து செல்வீர்கள். குழந்தைகளுக்கு திடீர் நன்மைகள் ஏற்படும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மகரம்**
பிறரிடம் இருந்து அன்பு வார்த்தைகள் கிடைக்கும். சந்தோஷம் கூடும். வாழ்க்கைத்துணையின் உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள். யாருக்கும் ஆலோசனை வழங்காதீர்கள். பேச்சில் கவனம்.

**கும்பம்**
பணியில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பணியாளர்கள் ஆயுதங்களை கையாளும் போது கவனமாக இருக்கவும். சுபநிகழ்ச்சி பற்றிய பேச்சுவார்த்தைகள் நன்கு முடியும்.

**மீனம்**
புதிய விஷயம் கற்பதற்காக நீங்கள் செய்யும் செலவு நன்மைக்கே. நீங்கள் எதிர்பார்த்த லாபம் நிதானமாகவே வரும். பொறுமை தேவை. உங்களால் நண்பர்களுக்கு நன்மை உண்டாகும். ஆரோக்யம் பற்றிய பயம் தீரும்.

# நேற்று முதல் இரவு நேர ஊரடங்கு சென்னையில் 10,000 பொலிஸார்!

சென்னை, ஜன. 07

கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில் தமிழகத்தில் நேற்று முதல் இரவு நேர ஊரடங்கு அமல்படுத்தப் படுத்தப்படுகிறது. இதனைக் கண்காணிப்பதற்காக 10 ஆயிரம் பொலிஸார் சென்னையில் குவிக்கப்பட்டுள்ளார்கள்.

உருமாறிய ஒமைக்ரோன் வகை கொரோனா தொற்று பரவலானது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் ஒமைக்ரோன் பாதிப்பை கட்டுப்படுத்த மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கொரோனா பரவலை கட்டுப்படுத்த தமிழகத்தில் இன்று முதல் இரவு ஊரடங்கு அமல்படுத்தப்படுகிறது. இந்த நேரத்தில் மாநிலங்களுக்கு இடையேயான பொது, தனியார் பஸ் சேவைகள் அனுமதிக்கப்படும். ஆனால், பயணத்தின்போது கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை தவறாமல் பின்பற்றுவதை சம் பந்தப்பட்ட போக்குவரத்து நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், சென்னையில் இரவு 10.00 மணி முதல் இரவு நேர ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்படும் நிலையில் மாநகர் முழுவதும் 10,000 பொலி ஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் படுகிறார்கள் என்று மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

சென்னையில் 499 இடங்களில் தடுப்புகள் அமைத்து தேவையின்றி வெளியில் வருபவர்கள் கண்காணிக்கப்படுவார்கள் என்றும், அத்தியாவசிய தேவையின்றி வெளியே சுற்றுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வணிக நிறுவனங்கள் வியாபாரம் செய்வோர் ஆகியோர் அனைவரும் பத்து மணிக்கு முன்பாக தங்களது வியாபாரத்தை முடித்துக் கொண்டு கடையை அடைத்து விட வேண்டும் என்றும், அத்தியாவசியப் பணி, மருத்துவ உதவி கோரி செல்பவர்கள் அதற்கான ஆவணங்களை காண் பித்தால் அனுமதிக்கப்படு வார்கள் என்றும் சென்னை மாநகர காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுஅறிவித்தல் வரை இந்த இரவு நேர ஊரடங்கு அமுலாகும். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முழுநாள் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப் படும்.

# ஒமைக்ரோன் தொற்றை எதிர்கொள்ள தமிழக அரசு தயாராகவே இருக்கிறது

## சட்டசபையில் ஆளுநர் உரை

சென்னை, ஜன. 07

ஒமைக்ரோன் தொற்றை எதிர்கொள்ள தமிழக அரசு தயாராக உள்ளது என்று சட்டசபையில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்தார். சட்டப் சுபையின் இவ்வருடத்துக்கான கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து நிகழ்த்திய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

பதவியேற்ற முதல் நொடியில் இருந்தே, ஒட்டுமொத்த அரசு எந்திரத்தையும் முடுக்கிவிட்டு, மருத்துவ கட்டமைப்பை மேம்படுத்தி, ஆக்சிஜனும், அத்தியாவசிய மருந்துகளும் மாநிலம் எங்கும் கிடைப்பதை உறுதிசெய்து, தடுப்பூசி பணிகளை மக்கள் இயக்கமாக மாற்றி, கொரோனா பெருந்தொற்றின் 2ஆவது அலையை திறம்பட கையாண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை மனமார பாராட்டுகிறேன்.

மாநிலத்தின் பொருளாதாரமும், மக்கள் வாழ்வாதாரமும் பெருமளவில் பாதிப்படையாமல், கொரோனா பெருந்தொற்றை இந்த அரசு வெற்றிகரமாக கட்டுப்படுத்திய முறை நமது நாட்டுக்கே முன்னோடியாக அமைந்தது.

மாநிலம் முழுவதும், வாரந்தோறும் மாபெரும் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்றபோது, தடுப்பூசிகளுக்கு தகுதியானவர்களில் 8.09 சதவீத மக்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 2.84 சதவீத மக்களுக்கு 2ஆவது தவணை தடுப்பூசியும் என்ற குறைந்த அளவிலேயே செலுத்தப்பட்டு இருந்தது.

இந்த அரசின் சீரிய முயற்சிகளால் இந்தநிலை மாறி, 7 மாதங்களில் 86.95 சதவீத மக்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 60.71 சதவீத மக்களுக்கு 2ஆவது தவணையும் என 8.55 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. இந்த முயற்சிகள் முழுமையாக வெற்றிபெற தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்” என அவர் தெரிவித்தார்.

# ‘நீட்’ தேர்வு விலக்கு தொடர்பில் அனைத்து கட்சிகளின் கூட்டம்

## நாளை நடைபெறும் என முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜன. 07

நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறுவது குறித்து விவாதிக்க நாளை அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெறும் என சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

சட்டப்பேரவை கூட்டத் தொடர் நேற்று முன்தினம் ஆளுநர் ஆர்.என்.ரவி உரையுடன் தொடங்கியது. நேற்று உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நீட் தேர்வு விலக்கு பெற அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கம் அளித்தார். எந்தவொரு நுழைவுத்தேர்வும் ஏழை, எளிய மாணவர்களை பாதிக்கும் என தெரிவித்த முதலமைச்சர், நீட் தேர்வு வசதி வாய்ப்புள்ள மாணவர்களுக்கு மட்டுமே சாதகமாக உள்ளதாக குறிப்பிட்டார்.

நீட் தேர்வு மாணவர்களின் கல்விக்கனவை சிதைப்பதாகவும், இந்தியாவின் கூட்டாட்சி தத்துவத்தையே சீர்குலைக்கும் வகையில் உள்ளதாகவும் தெரிவித்த அவர், நீட் விலக்கு மசோதா குறித்து டி.ஆர்.பாலு தலைமையில் உள்துறை அமைச்சகத்தில் அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் மனு அளித்ததை சுட்டிக்காட்டிய அவர், தமிழ்நாடு எம்பிக்களை மத்திய அமைச்சர் அமித்ஷா சந்திக்க மறுத்தது, மக்களாட்சியின் மாண்புக்கு எதிரானது என தெரிவித்தார்.

நீண்ட நெடிய அரசியல், சட்டம் மற்றும் மக்கள் போராட்டத்திற்கு பின்னரே சமூக நீதி போராட்டத்தில் தமிழ்நாடு வெற்றி பெற்றுள்ளது என்றும், நீட் நுழைவுத் தேர்வுக்கு எதிரான போராட்டத்தையும், சமூக நீதி இயக்கத்தின் அடுத்தகட்ட போராட்டம் எனக்கருதி முன்னெடுத்து செல்வோம் எனவும் முதலமைச்சர் உறுதிபட தெரிவித்தார். அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்வது குறித்து நாளை அனைத்துக்கட்சி கூட்டம் கூட்டப்பட உள்ளதாகக் கூறிய அவர், கூட்டத்தில் எடுக்கப் படும் முடிவுகளின் அடிப்படையில் நீட் தேர்வுக்கு எதிரான சட்டப்போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்தார்.

# தீவகத்தில் சுற்றுலாத்துறை வளர்ச்சி அதிகரிக்கின்றது

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 07

**தீவகப் பகுதியில் வேலைவாய்ப்பு இன்றி காணப்படும் இளைஞர் யுவதிகளுக்களின் தொழில்முயற்சிக்கான வாழ்வாதாரத்தின் பெற்றுக்கொடுக்க எதிர்காலத்தில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டுவருவதாகக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

வேலணை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மண்கும்பான் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சுற்றுலாப் படகுகள் சேவையை ஆரம்பிக்கும் கட்டட நிர்மாணப் பகுதி நேற்று திறந்து வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடற்பரப்பிலான துரித அபிவிருத்தி சேவையிலான பங்களிப்பை வழங்க தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்த நிலையில் இதற்கான நடவடிக்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்காக மிகுந்த நன்றியை தெரிவித்துகொள்கின்றேன்- என்றார்.

26 மில்லியன் ரூபா செலவில் முதற்கட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் இலங்கை கப்பற்துறை கூட்டுத்தாபனத்தின் தலைவர் வீரமன்னன் ராஜவே, வடபிராந்திய கடற்படை கட்டளைத்தளபதி அட்மிரல் பிரியந்த பெரேரா, யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகர், யாழ் இந்திய துணைத்தூதரகத்தின் பதவிநிலை அதிகாரி டீ.கேசர் உள்ளிட்ட அதிகாரிகள், சுற்றுலாத்துறை அதிகாரிகள், அமைச்சின் உத்தி



யோகத்தர்கள், பலரும் கலந்து கொண்டனர். (அ)

## நாடக அரங்கியல் சான்றிதழ் கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜன. 07

நாடகக் கலையின் மேம்பாடு கருதி,செயல் முறை சார்ந்த தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகம் கடந்த 30 வருடங்களாக நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியை நடத்தி வருகின்றது.இக் கற்கைநெறியின் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் இணைந்து பயில்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும்,நாடகமும் அரங்கியலும் பாடத்தை தரம் 11,12,13 இல் பயிலும் மாணவர்களும் இக் கற்கை நெறியில் இணைந்து கொள்ள முடியும்.

ஆறுமாதங்களைக் கொண்ட இக் கற்கைநெறிக்கான வகுப்புக்கள் சனி,ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை நடைபெறும். அத்துடன் போயா தினங்களில் முழுநாள் நாடகப் பட்டறையும் இடம்பெறும். இக்கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பாக மீள ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றார்கள். (அ)

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

கொழும்பு, ஜன. 07

அமைச்சரவையில் பாரிய மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளாரென சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி அமைச்சரவையில் 60 வீதமான மாற்றங் கள் இடம்பெறக்கூடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னதாக அமைச்சரவை மாற்றம இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சுகளின் விடயதானங்கள் கைமாற்றப்படவுள்ளன. புதிதாக எவரும் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படமாட்டார்கள்.

விவசாய அமைச்சில் மாற்றம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுவதோடு, எஸ்.பி.திசாநாயக்கவுக்கு இராஜாங்க அமைச்சு பதவியொன்று கிடைக்கும் எனவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பொது இடங்களில் கோவிட் தடுப்பூசி அட்டை கட்டாயம்

## சட்ட தயாரிப்புப் பணி இறுதிக்கட்டத்தில்

கொழும்பு, ஜன. 07

பொது இடங்களுக்கு பிரவேசிப்போர் கோவிட்-19 தடுப்பூசி அட்டைகளை கட்டாயம் வைத்திருக்கவேண்டும் என்பது தொடர்பான சட்ட தயாரிப்புப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

இது தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், பூஸ்டர் எனப்படும செயலூக்கி தடுப்பூசியை அனைவரும் பெற்றுக் கொள்ளவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இரண்டாவது தடுப்பூசியை



செலுத்திய பின்னர், முதல் 3 மாதங்களில் மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த தடுப்பூசி செலுத்தல் மூலம் பல்வேறுப்பட்ட நோய் அறிகுறிகள் ஏற்படுவதாக வெளியான தகவல் இதுவரை விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை என அவர் மேலும் கூறினார். (அ)

# பால்மாவுக்கான தட்டுப்பாடு இம்மாத இறுதிவரை தொடரும்

கொழும்பு, ஜன. 07

சந்தையில் நிலவும் பால்மாவுக்கான தட்டுப்பாடு இந்த மாத இறுதி வரையில் தொடரும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மாத இறுதியிலோ அல்லது பெப்ரவரி மாதத்தின் முற்பகுதியிலோ பால்மா ஏற்றிய கப்பல்கள் வரவுள்ளதாக அந்த சங்கத்தின் பேச்சாளர் அஷோக பண்டார தெரிவித்தார்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக கடந்த 31 ஆம் திகதி முதல் பால்மா விலையை அதிகரிப்பதற்கு அதன் இறக்குமதியாளர்கள் தீர்மானித்தனர்.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பால்மா பொதியின் விலை 150 ரூபாவாலும் 400 கிராம் பால்மா பொதியின் விலை 60 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டன.

இதற்கமைய, ஒரு கிலோ கிராம் பால்மா பொதி 1,345 ரூபாவுக்கும் 400 கிராம் பால்மா பொதி 540 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தேங்காய் ஏற்றுமதி வலயம் உருவாகும்

கொழும்பு, ஜன. 07

அம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்மித்த பகுதியில் தேங் காய் உற்பத்திகளுக்கான அதிக தேவையினால் புதிய தேங்காய் ஏற்றுமதி வலயமொன்று உருவாக்கப்படவுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட அவர், தேங்காய் ஏற்றுமதியில் மாத்திரம் கடந்த வருடம் 900 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார். (அ)

# பெருந்தோட்ட கைத்தொழில்துறையால் நாட்டின் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 07

பெருந்தோட்ட கைத்தொழில்துறை வரலாற்றில் அதிக ஏற்றுமதி வருமானம் கடந்த வருடத்திலேயே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க கடந்த வருடத்தில் ஏற்றுமதி வருமானமாக பில்லியன் கணக்கான ரூபாக்களை அரசாங்கம் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இறப்பர் ஏற்றுமதி மூலம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரையும் தேங்காய் ஏற்றுமதி மூலம் 900 மில்லியன் அமெரிக்க டொலரையும் வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி மூலம் 500 மில்லியன் அமெரிக்க டொலரையும் கடந்த வருடத்தில் வருமானமாக பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அதேவேளை, இந்த வருடத்தில் பயிர்ச்செய்கை செய்யக்கூடிய சகல நிலத்திலும் முழுமையாக ஏற்றுமதிக்கான பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை காலமும் இறப்பர் பால் சேகரிப்பில் மக்கள் முழுமையான கவனம் செலுத்தவில்லை.

எனினும் தற்போது இறப்பர் கிலோவொன்றுக்கான விலை 500 ரூபாவாக அதிகரித்துள்ளது. 200 - 300 ரூபாவுக்கு கடந்த காலங்களிலும் விற்பனை செய்யப்பட்ட மிளகு தற்போது சுமார் 1000 ரூபா வரை விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் அனைத்து ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களின் விலைகளிலும் பெரும் முன்னேற்றம் காணப் படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# மாலைநேர கல்வித் திட்டம் அல்வாயில் ஆரம்பமானது

யாழ்ப்பாணம், ஜன. 07

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அல்வாய் வடக்கு மகாத்மா கிராமத்தில் மாலைநேர கல்வி திட்டம் ஒன்று நேற்று முன் தினம் மாலை 4:30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாம் செய்வோம் அமைப்பு அனுசரணையில் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினரால் இணைந்து ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த மாலை நேர கல்வித்திட்டத்தில் தரம் 1 முதல் 5 வரையான நாற்பது மாணவர்கள் பங்கு கொண்டனர்.

மகாத்மா சனசமூக நிலைய தலைவர் யோகநாதன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த கல்வித்திட்ட ஆரம்ப நிகழ்வில் மங்கல விளக்குகளை அரசியல் ஆய்வாளர் சி.ச.ஜோதிலிங்கம், மருத்துவர் க.பவனந்தி, முன்பள்ளி ஆசிரியை திருமதி சுகந்தினி ஜெகதாசா, ஆசிரியை அருணா கந்தசாமி, கராத்தே யோகா ஆசிரியர் பே.வில்வம் உட்பட்ட பலரும் ஏற்றி வைத்தனர். இந்த மாலை நேர கல்வித் திட்டத்தில் தற்போது தரம் ஒன்று முதல் ஐந்து வரை 40 மாணவர்கள் கலந்து கொண்டுள்ளதாகவும் இந்த திட்டம் மாலை 4:00 மணி முதல் ஆறு மணிவரை ஞாயிறு தவிர்ந்த நாட்களில் இடம் பெறும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ)



## சீனா-இலங்கை ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவது உறுதி

கொழும்பு, ஜன. 07

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவதற்கு உறுதியாக இருப்பதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்ஹொங்வுக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கும் இடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் இரண்டு நாடுகளுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டு வரும் வர்த்தக மற்றும் கலாசார ரீதியிலான தொடர்புகளை பலப்படுத்தவும் புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் தாம் தயாராக இருப்பதாகவும் சீனத் தூதுவர் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து இலங்கைக்கு சீனா தொடர்ந்து வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு சபாநாயகர் நன்றி பாராட்டினார்.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீரவும் கலந்துகொண்டார். (அ)

## சுசில் பிரேமஜயந்தவின் எம்.பி. பதவியும் பறிப்பு?

கொழும்பு, ஜன. 07

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கை குறித்து சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல்பீட கூட்டத்தின்போது தீர்மானிக்கப்படவுள்ளதாக தககல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக சுசில் பிரேமஜயந்தவுக்கு எதிராக எடுக்கப்படவுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை குறித்து அரசியல்பீட கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் எனக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அரசியல்பீட கூட்டத்தின் திகதி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவரது கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டால், அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிக்கப்படும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

### இலங்கையில் ஒமைக்ரோன் சமூக பரவல்

# தொற்றாளர் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கலாம்!

**கொழும்பு, ஜன. 07**

**இலங்கையில் ஒமைக்ரோன் சமூகப் பரவலுக்குரிய அறிகுறிகள் தென்படுவதாகத் தெரிவித்துள்ள சுகாதார அதிகாரிகள், இந்த மாதம் இரண்டாவது வாரத்தில் தொற்று நோயாளர் தொகையில் சடுதியான அதிகரிப்பு ஏற்படலாம் எனவும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.**

நத்தார் மற்றும் புதுவருட விடுமுறைக் காலங்களில் மக்களின் பொறுப்பற்ற நடத்தைகள் தொற்று நோயின் தீவிர பரவலுக்கு வழிவகுக்கலாம் எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இதுவரை 50க்கும் மேற்பட்ட ஒமைக்ரோன் தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். எனினும் தற்போது தொற்று உறுதியாவோரில் 12 வீதத்துக்கும் அதிகமானவர்கள் ஒமைக்ரோனால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என சுகாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

ஒமைக்ரோன் சமூகத்தில் பரவியுள்ளது. பரவல் மேலும் வேகமடைந்தால் தற்போது ஐரோப்பிய நாடுகளில் உள்ள நிலை இலங்கையிலும் ஏற்படும் என சுகாதார அமைச்சின் ஊடக பேச்சாளரும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளருமான ஹேமந்த ஹேரத் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, ஒமைக்ரோன் திரிபு தொற்று நோயாளர் தொகை ஒவ்வொரு இரண்டு முதல் மூன்று நாட்களில் இரட்டிப்பாகிறது. இந்நிலையில் பொதுமக்களின் பொறுப்பற்ற நடத்தை நிலைமையின் தீவிரத்தை அதிகரிக்கும் என ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

தடுப்பூசி போட்டுக்கொள்ள யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் பொதுமக்களின் ஆதரவு இல்லை என்றால் தொற்று நோயை ஒழிக்க முடியாது. தொற்று நோய் தீவிரமடைந்தால் அதன் விளைவுகள் மோசமாக இருக்கும். நாடு மீண்டும் ஒரு முறை முடக்கப்பட்டால் பொருளாதார நெருக்கடி தற்போது உள்ளதை விடக் கொடியதாக இருக்கும் எனவும் அவர் எச்சரித்தார்.

இதற்கிடையில், ஒமைக்ரோன் பரவல் காரணமாக தொற்று நோயாளர் தொகை அதிகரித்தால் மருத்துவமனைகள் அவற்றின் பராமரிப்பு திறனை இழக்க நேரிடும் என வைத்திய நிபுணர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது. (அ)

## பியகமவில் பணத்தை அச்சடிக்கிறார் பஸில்!

### கூறுகிறார் மைத்திரிபால



கொழும்பு, ஜன. 07

நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, பியகமவில் உள்ள தொழிற்சாலையொன்றில் பணம் அச்சடித்து வருவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதி பதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேவையான அளவுக்கு ரூபாவை அச்சடிக்கமுடியுமென குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி, டொலர்களை அச்சடிக்க முடியாது எனவும் கூறினார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை தற்போது வேறு பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் முறையான முகாமைத்துவம் இன்மையே இதற்கான பிரதான காரணம் எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தார். (அ)

## எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்கியமையை எதிர்த்து போராட்டம்



திருமலை, ஜன. 07

திருகோணமலை சீனக்குடா எண்ணெய் குதங்களை இந்தியாவிற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

திருகோணமலை பிரதான பஸ் நிலையத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் புதன்கிழமை கிழக்கு மக்களின் குரல் அமைப்பினால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நாட்டை விற்காதே, அரசாங்கமே தேசத்தின் சொத்துக்களை விற்றுத் தின்னாதே, டொலர் இல்லையென்றால் எண்ணைக்குத்தங்கள் மூலம் நாட்டுக்கு வருமானத்தை அதிகரி, தேசிய சொத்துக்களை கூறு போடாதே போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கிழக்கு மக்கள் குரல் அமைப்பாளரும்,மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளருமான சட்டத்தரணி அருன் ஹேமச்சந்திரா-

திருகோணமலை சீனக்குடா எண்ணெய்க் குதங்களை இந்திய நிறுவனத்துக்கு விற்கப்படும் என எரிபொருள் எரிசக்தி அமைச்சர் கூட ஏற்றுக்கொண்டுள்ளார். உண்மையிலேயே இந்த நாட்டின் விலைமதிக்க முடியாத சொத்துக்களான இந்த எண்ணெய் தாங்கிகளை விற்பது என்ற விடயத்தை ஒரு போதும் நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

இந்த மண்ணுக்கு கடமைப்பட்டுள்ள அனைவரும் இந்த விற்பனைக்கு எதிராக அணி திரள வேண்டும் என்ற கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். எந்தவொரு மதிப்பீடும் செய்யாமல் விலை மதிப்பற்ற இந்த சொத்துக்களை விற்க முன் வருவது நிச்சயமாக கண்டிக்கத்தக்க விடயமாகும்-என்றார்.(அ)

## திருட்டை நிறுத்தினால் நாட்டின் கடனில் பாதியை அடைக்கலாம்

### சுட்டிக்காட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 07

நாட்டில் நிலவும் ஊழல் மற்றும் முறைகேடுகளை தடுத்து நிறுத்தினால் தற்போதுள்ள கடன் சுமையில் பாதியை அடைக்க முடியும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித் துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்தவகையில் திருட்டு மற்றும் மோசடிகளை தடுக்க நடவடிக்கை எடுப்பதே எங்களது முதல் நோக்கமாக இருக்குமெனவும் அவர் கூறினார்.

மேலும் அரசியல்வாதிகளுக்கு எதிராக மட்டுமன்றி ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு துணைபோகும் அதிகாரிகளுக்கு எதிராகவும் சட்டம் அமுல்படுத்தப்படவேண்டுமெனவும் விஜித ஹேரத் வலியுறுத்தினார்.

## பொருளாதாரப் படையணியை நிறுவியது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜன. 06

பொருளாதாரக் கொள்கைகள் கேந்திர நிலைமொன்றை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நிறுவியுள்ளது.

பொருளாதாரத்துறையில் நிபுணத்துவம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசீம் மற்றும் இரான் விக்கிரமரத்ன ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் குறித்த கேந்திர நிலையம் இயங்கவுள்ளது. நாடு கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில்,

நாட்டை மீள் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை இந்த குழு முன்வைக்கவுள்ளது. (அ)

# எரிவாயு வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காப்பீடு!

## ஒரு மில்லியன் ரூபாய் வரை பெறலாம்

கொழும்பு, ஜன. 07

**எரிவாயு வெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெசார ஜயசிங்க இதனைத் தெரிவித்தார்.**

அனைத்து லிட்ரோ எரிவாயு பாவனையாளர்களுக்கும் 10லட்சம் ரூபாய் வரை யான காப்புறுதியை பெற்றுக்கொள்ளமுடியும்.

பாதிக்கப்பட்டவர்கள் 1311 என்ற இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் இந்த காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

இந்த காப்புறுதித் திட்டத்தின் மூலம் இதுவரை மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்களே விண்ணிப்பித்துப் பயன் பெற்றிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# எரிபொருள் விலையேற்றம்; கொழும்பில் போராட்டம்!

கொழும்பு, ஜன.7

எரிபொருள் விலையேற்றம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் தீப்பந்தப் போராட்டம் கொழும்பு தெமட்டகொடை மேம்பாலத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தீப்பந்தங்களை ஏந்தியவாறும் எரிவாயு சிலிண்டரை முதுகில் சுமந்தவாறும் சுமார் ஒரு மணிநேரம் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், "எரிபொருள் விலையை குறைக்கவும்", "மக்களுக்கு நிவாரணம் வழங்கவும்", "சேர் பெயில் அரசாங்கமும் பெயில்", "சமயலறையில் எரிவாயு இல்லை; நாட்டுக்கு மின்சாரம் இல்லை", "வயிற்றுக்கு உணவு இல்லை; அரசாங்கத்துக்கு



மூளை இல்லை" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (கே)

# அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் தோட்டத் தொழிலாளருக்கு 500 ரூபாய்!

## ஏன் இந்த பாகுபாடு என்கிறார் உதயகுமார் எம்.பி.

கொழும்பு, ஜன. 07

கோதுமை மாவில் விலையை குறைத்து பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்னைகளை தீர்த்து விட முடியும் என இந்த அரசாங்கம் நினைத்தால் இதுபோன்ற முட்டாள்தனமான அரசாங்கம் வேறு ஏதும் கிடையாது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு மாத்திரம் கோதுமை மா குறைந்த விலையில் வழங்கப்படும் என அரசாங்கம் விடுத்த அறிவிப்பு பெருந்தோட்ட மக்களை அவமதிப்பதாக அமைந்துள்ளதென அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

அரச ஊழியர்களுக்கு 5000 ரூபாய் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் இதனை தனியார் ஊழியர்களுக்கும் வழங்குவதற்கு உரிய பேச்சு இடம்பெறும் என்றும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறியுள்ள நிலையில் தனியார் ஊழியர்கள் பட்டியலில் சேர்க்கப்படும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஏன் ஐயாயிரம் ரூபா வழங்க முடியாது?

மானிய விலையில் 15 கிலோ கோதுமை மா வழங்கினால் அதன் பெருமதி வெறும் 500 ரூபாய் மாத்திரமே. அரச ஊழியர்களுக்கு 5000 ரூபாவும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 500 ரூபாயும் வழங்கும் இந்த அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் என்ன? ஏன் இந்த பாகுபாடு?

இந்த அரசாங்கத்தினால் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் கவனிக்கப்படுகின்றனர். - என்றார். (அ)

# பூநகரி பிரதேச சபையின் பட்ஜெட் 9 மேலதிக வாக்குகளால் வெற்றி

கிளிநொச்சி, ஜன. 07

பூநகரி பிரதேசசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் 9 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் சபையின் தவிசாளர் சி.சிறீரஞ்சன் தலைமையில் ஆரம்பமானது. தவிசாளர் தலைமை உரையை அடுத்து இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டை சபைக்கு சமர்ப்பித்தார்.

பட்ஜெட் தொடர்பான விவாதத்தையடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

20 உறுப்பினர்களை கொண்டுள்ள குறித்த சபையில் பட்ஜெட்டுக்கு ஆதரவாக 12 உறுப்பினர்கள் ஆதரவாகவும் மூன்று உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். 5 உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்கவில்லை. (அ)

# பணத்தை அச்சிடுவது நெருக்கடியை தீர்க்காது

## கூறுகிறார் வஜிர அபேவர்த்தன

கொழும்பு, ஜன. 07

இலங்கையின் பொருளாதாரத்துக்கு தற்போதைய அரசாங்கத்தினால் ஏற்பட்டுள்ள சேதத்தை பணத்தை அச்சிட்டு மக்களுக்கு விநியோகிப்பதன் மூலம் தீர்க்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமரான ரணில் விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டு இறுதியில் ஆட்சிக்கு வந்து, நாட்டை மீண்டும் கட்டியெழுப்பி அனைத்து பிரஜைகளையும் சுபீட்சம் அடையச் செய்யும் யுகத்தை ஆரம்பிப்பார் எனவும் அவர் கூறினார்.

பத்தேகம தேர்தல் தொகுதிக்குட்பட்ட சந்தரவல ஹல்ப தொட்ட முன்பள்ளி திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புத்தாண்டில் அரசாங்கம் வழங்கும் நிவாரணப் பொதியில் இருந்து டொலர்கள் நாட்டுக்குள் வராது, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் விலை குறையாது. விவசாயத்துக்கு தேவையான அத்தியாவசிய உரங்கள் வழங்கப்படுவதில்லை.

மருந்துகளை இறக்குமதி செய்ய தனியார்துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், வரியிலிருந்து பொருட்களை விடுவிக்கவும்,



மருந்துகளை இறக்குமதி செய்யவும் டொலர்கள் இருக்க வேண்டும். இன்றைய நிலவரப்படி ஒரு டொலரின் உண்மையான மதிப்பு ரூபாய் 252 ஐ தாண்டியுள்ளது. இந்த நிலையில் புதிய வருடத்தில் மக்கள் பாரிய அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வரும் வினைத்திறனற்ற வேலைத்திட்டத்தினால் நாடு நாளுக்கு நாள் சோகமான நிலைக்கு தள்ளப்பட்டு வருகிறது. விவசாய சமூகத்துக்கு உரம் வழங்காமல் பணம் கொடுத்து தால் மக்கள் பணத்தை நுகர முடியாது.

இன்று சந்தையில் ஒரு கிலோ பச்சை மிளகாய் விலை ரூ.1,300 ஆக உயர்ந்துள்ளது. ஒவ்வொரு காய்கறியின் விலையும் ரூ. 500 இற்கு மேல் உள்ளது. இந்த நிலைமைகளின் கீழ் வாழ்வது மக்களுக்கு கடுமையான பிரச்னையாக மாறியுள்ளது. அரசாங்கத்தின் தேசியக் கொள்கைகளில் உள்ள தவறுகளை பொது ஊழியர்களின் மீது சுமத்தி அவர்களை பதவியில் இருந்து நீக்குவதன் மூலம் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாது - என்றார்.

# பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் உயிரை மாய்க்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜன. 07

பருத்தித்துறை பொலிஸ் நிலைய தடுப்பு காவலில், தடுத்து வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில் பொலிஸாரினால் காப்பாற்றப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றது.

அல்வாய் பகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

குறித்த நபர் தனது மனைவியை தாக்கினார் என அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அதன் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த நபரை கைதுசெய்து, பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் தடுத்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் அவர் தடுப்புக்காவலில் தனது சாரத்தை கழற்றி அதன் மூலம் தூக்குப் போட்டு தனது உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

அதனை கண்ணுற்ற பொலிஸார் அவரை காப்பாற்றி மந்திகை வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (அ-03)

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# 'எக்ஸ்ரே' எடுப்பதற்காக சென்ற மூதாட்டியின் நகைகள் திருட்டு!

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற சென்ற வயோதிபப் பெண்மணியின் 3 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் குறித்த வயோதிபப் பெண் நேற்று வியாழக்கிழமை சிகிச்சையின் நிமித்தம் 'எக்ஸ்ரே' எடுப்பதற்காக சென்றபோது, தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலி மற்றும் காப்பு ஆகியவற்றைக் கழற்றி தனது கைப்பையினுள் வைத்துச் சென்றுள்ளார்.

திரும்பி வந்து கைப்பையை பார்த்தபோது, அதனுள் இருந்த நகைகள் களவாடப்பட்டிருந்தமையை கண்ணுற்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறையிட்டார்.

நிர்வாகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய வைத்தியசாலை பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வருவோர் நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை கொண்டு வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் பல தடவைகள் எச்சரித்து வந்தது.

தினமும் வைத்தியசாலைக்கு பெருமளவானோர் பல்வேறு பகுதிகளில் இருந்து வருவதால் சிகிச்சைக்கு வருவோர் தமது உடைமைகளை தாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. அதனால் பெறுமதியான உடைமைகளுடன் வருவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கோரியுள்ளது. (அ-03)




# மறுசீரமைக்கப்பட வேண்டியது எமது வெளிவிவகார கொள்கை

**வேல்ஸ் இல் இருந்து அருஸ்**

சீனத் தூதுவரின் யாழ் பயணம், இலங்கை இராணுவ அதிகாரிகள் மீது அமெரிக்கா தொடர்ச்சியாக கொண்டுவரும் பயணத் தடைகள், 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற ஆவலாக இருக்கும் இந்தியா என்பன கடந்து சென்ற வருடத்தின் இறுதியில் நிகழ்ந்த நிகழ்வுகளாகும்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கிய இலங்கை அரசை தனது வலையில் விழ வைப்பதற்கு இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகள், சீனாவுக்கு தனக்கான பேரம் பேசும் தரப்பு ஒன்றைத் தேடும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. அதன் வெளிப்பாடுகள் தான், தமிழ் மக்களுடன் நல்லுறவைப் பேண முற்பட்டும் விதமாக அமைந்திருந்த சீனத் தூதரகக் குழுவின் பயணம்.

இந்திய மற்றும் சிங்கள மீனவர்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மீனவர்களுக்கான உதவி, கடற்தொழிலை மேம்படுத்தும் திட்டங்கள், சிங்கள இனவாதிகளால் எரிக்கப்பட்ட யாழ். நூலகத்தை இணையவழி நூலகமாக மாற்றம் திட்டம் என்பவற்றுடன் நின்றுவிடாது, வடக்கின் பிரசித்தி பெற்ற நல்லூர் ஆலயத்திற்கும் சம்பிரதாய விதிகளை மதித்து வழிபாடுகளையும் மேற்கொண்டிருந்தனர்.

அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு 20 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிக்சை அளிக்கும் இயந்திரங்களையும் வழங்கியிருந்தனர்.

மாகாண சுகாதார அமைச்சு இருக்கும் போது, எதிர்க்கட் சித் தலைவரின் ஊடாக வழங்கப்பட்ட இந்த உதவி என்பது இலங்கையில் எல் லாத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் வெளிவிவகாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த சீனா விரும்புவதையே காட்டுகின்றது.

அதேசமயம், இலங்கை அரசு மீதான பொருளாதார அழுத்தங்களையும் சீனா மறைமுகமாக மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகின்றதா என்ற சந்தேகமும் தென்னிலங்கையில் எழுந்துள்ளது.

இயற்கை உரம் இறக்குமதி விவகாரத்தில் இலங்கை அரசு 6.7 மில்லியன் டொலர்கள் தண்டப்பணம் செலுத்தத் தீர்மானித்துள்ள போதும், இலங்கை மீது ஒரு பொருளாதாரத் தடை ஏற்படுத்தப்பட வேண்டும் என சீ விங் நிறுவனம் சீன அரசைக் கேட்டுள்ளது. மேலும் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தேயிலை மீது கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் எனவும் அது பரிந்துரை செய்துள்ளது.

இதனிடையே தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் மூலம் நகர்வை மேற்கொள்ளலாம் என்பதில் நம்பிக்கை இழந்துள்ள அமெரிக்கா, தனது கூட்டணி நாடுகளின் ஊடாக அதனை நேரிடையாக மேற்கொள்ள முனைந்து நிற்கின்றது. அதன் வெளிப்பாடுகள் தான் ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள். அது மட்டுமல்லாது, தமிழ் அரசியல்வாதிகளையும் அதில் பயன்படுத்திக் கொள்ள அது தற்போது முனைப்புக் காட்டுகின்றது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் அமெரிக்காவின் அபிவிருத்தித் திட்டங்களைப் பிராந்திய சக்திகளின் பின்புலத்துடன் சிங்கள இனம் முறியடித்து வருவதுடன், தமது பொருளாதார சிக்கலைத் தீர்க்கவும், இலங்கை அரசு மேற்குலகம் சார்ந்த அனைத்துலக நாணய நிதியத்தின் உதவியை விடுத்து, பிராந்திய வல்லரசுகளின் உதவியை நாடுவது என்பது இலங்கை விவகாரத்தில் மேற்குலகத்தின் நகர்வுகள் அனைத்தும் தோல்வியைச் சந்திப்பதையே காட்டுகின்றது.

இந்த நிலையில் தான் அமெரிக்கா இலங்கை மீதான தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இரண்டு படை அதிகாரிகள் மீது பயணத்தடையை விதித்த அமெரிக்காவின் வெளிவிவகாரத் துறை, தற்போது மேலும் ஒரு ஜெனரலுக்கும் தடை விதித்துள்ளது.

அது மட்டுமல்லாது, புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலும் தனது ஆர்வத்தை வெளியிட்டு வருகின்றது.

**இந்தியாவைப் பொறுத்தவரையில், தனது இழந்த பிடியை மீண்டும் தூக்கி நிறுத்தக் கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது. 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுமாறு தமிழ் கட்சிகள் இந்தியாவைக் கூட்டாகக் கோரவேண்டும் என்ற கொள்கையில் இந்தியா ஆவலாக உள்ளது**

எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அமெரிக்கா தன்னை இணைத்துக் கொண்டாலும் ஆச்சரியப்பட முடியாது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், தனது இழந்த பிடியை மீண்டும் தூக்கி நிறுத்தக் கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது. 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுமாறு தமிழ் கட்சிகள் இந்தியாவைக் கூட்டாகக் கோர வேண்டும் என்ற கொள்கையில் இந்தியா ஆவலாக உள்ளதுடன், அதற்கான ஒன்றிணைத்தலிலும் இந்தியத் தூதுவர் இரவு பகலாக பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நகர்வுகளில் நாம் எவ்வாறு பயணிக்க வேண்டும் அல்லது அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கு எம்மிடம் ஒரு தெளிவான வெளிவிவகாரக் கொள்கை வேண்டும் என நாம் எப்போதும் வலியுறுத்துவது உண்டு.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறான காத்திரமான கொள்கை தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளிடமோ அல்லது புலம்பெயர் தேசத்து அமைப்புகளிடமோ இல்லை என்பதே உண்மை. ஆனால் அதனை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இன்று எம்மில் சிலர் இந்தியாவை எதிர்க்கின்றனர். சிலர் சீனாவை எதிர்க்கின்றனர். சிலர் மேற்குலகத்திற்கு எதிராக விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இது எதனால் என்றால், நாம் ஒரு தெளிவான வெளிவிவகாரக் கொள்கை உள்ள இனமாக எம்மை கட்டியமைக்கவில்லை என்பதாலா என்றால் அது உண்மையில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் அவர்கள் எந்த நாட்டையும் எதிர்க்கவில்லை. யாருக்கு எதிராகவும் எந்தச் சொற்களையும் பயன்படுத்தவில்லை. 2002 ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட பின்னர், இலங்கைக்கான சீனத் தூதரக அதிகாரிகள் தமது குழுவினருடன் வன்னி சென்றிருந்ததுடன், விடுதலைப்புலிகளும் பிராந்திய வல்லரசுடன் நல்லுறவுகளையே பேணியிருந்தனர்.

அது மட்டுமல்லாது, பல நாடுகளுக்குச் சென்ற விடுதலைப்புலிகளின் குழுவினர், எல்லா நாடுகளுடனும் நட்புறவைப் பேணும் நடவடிக்கைகளையே முன்னெடுத் திருந்தனர்.

எமது வெளிவிவகாரக் கொள்கை அவ்வாறான முக்கியமான நாடுகளில் தென்னாபிரிக்காவும் ஒன்று. தென்னாபிரிக்காவிற்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான பலமான நட்புறவுகளை ஏற்படுத்துவதில் மிக முக்கிய பங்கு வகித்தவர் பேராயர் டெஸ்மட் டுட்டு ஆவார்.

தென்னாபிரிக்காவின் விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்த அவர், தென்னாபிரிக்காவின் விடுதலைப்போராளியும், அரச தலைவருமான மறைந்த நெல்சன் மண்டேலாவுடன் இணைந்தும் செயற்பட்டவர். ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடிய அவர், எமது விடுதலைக்கு ஆதரவாகவும் செயற்பட்டிருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பத்தில் மேற்கொண்ட தீர்மானத்திற்கு ஆதரவாக ஆபிரிக்க நாடுகளைத் திரட்டுவதில் அவரின் பங்கு முக்கியமாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இன்று அவரை நாம் இழந்துள்ளோம். கடந்த மாதம் 26 ஆம் நாள் அவர் மரணமடைந்தது தமிழ் இனம் ஒரு நல்ல நண்பரை, எமது இனத்தின் கோரிக்கைகளை அனைத்துல மட்டத்தில் கொண்டு செல்வதற்கான ஒரு தளத்தை இழந்துள்ளது.

எமது வெளிவிவகாரக் கொள்கைஒரு தெளிவான வெளிவிவகாரக் கொள்கை எம்மிடம் இல்லை என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் விடுதலைப் புலிகளின் நடைமுறை அரசு இருந்தபோது எம்மிடம் அதற்கான தெளிவான கொள்கை இருந்தது. எந்த நாட்டையும், எந்த இனத்தையும் அந்த நடைமுறை அரசு பகைக்கவில்லை. ஆனால் இன்று நாம் அதனை மறந்து எமது நலம் சார்ந்து இயங்குவதே தற்போதைய சீரழிவுக்குக் காரணம்.

அதனை விரைவாகச் சீர்செய்ய வேண்டிய கடமை ஒன்று எம்முன் உள்ளது. ஏனெனில், இலங்கை விவகாரம் தொடர்பில் அனைத்துலகத்தின் செயற்பாடுகள் விரைவாக மாற்றம் பெற்று வருகின்றன. அதனை உறுதிப்படுத்துவது போலவே இந்த வருடத்தில் முதலாவதாக இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் இராஜதந்திரியாக சீன வெளிவிவகார அமைச்சரின் பயணம் அமைந்துள்ளது. ■

# பஸில் ராஜபக்ஷ அறிவித்த திடீர் சலுகைகள் பொருளியல் நிபுணர்கள் கருத்து என்ன?

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கை பாரிய பொருளாதார பின்னடைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்த தருணத்தில், அரசாங்கம் மக்களுக்கு திடீர் நிவாரண உதவித் திட்டத்தை அறிவித்துள்ளது. ஆனால், இது மக்களை நிலையற்றதாக்கலாம் என்று பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனவரி 3ஆம் திகதி இரவு இந்த திடீர் அறிவிப்பை வெளியிட்டார்.

இலங்கையிலுள்ள 14,50,450 அரசு ஊழியர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக சம்பள முரண்பாட்டு பிரச்னை தீர்க்கப்பட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இந்த 5000 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

ஓய்வு பெற்ற 6,66,480 பேருக்கு, ஓய்வூதிய கொடுப்பனவிற்கு மேலதிகமாக மாதாந்தம் 5,000 ரூபா வழங்கப்படும்.

வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்காக சமுர்த்தி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ,500 ரூபா கொடுப்பனவிற்கு மேலதிகமாக, அவர்களுக்கு 1,000 ரூபா வழங்கப்படும்.

20 பர்ச்சஸ் நிலப்பரப்பில் வீட்டுத் தோட்டத்தை செய்வோருக்கு 10,000 ரூபா கொடுப்பனவொன்றை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் 6 மாதங்கள் கடந்த பின்னர், மீண்டும் இதே தொகை வழங்கப்படும் என்றும் நிதியமைச்சரின் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இது தவிர, மலையக மக்களுக்கு மாதாந்தம் 15 கிலோகிராம் கோதுமை மாவை கொள்வனவு செய்வதற்கு, தலா ஒரு கிலோகிராம் கோதுமை மாவை 80 ரூபாவிற்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கோதுமை மாவின் விலை தற்போது சந்தையில் 120 ரூபா முதல் 150 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்ற நிலையிலேயே இந்த நிவாரண அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகளுக்கு முழுமையான வரி விலக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட தேவையுடைய இராணுவ வீரர்களுக்கு மாதாந்தம் கொடுப்பனவுக்கு மேலதிகமாக 5000 ரூபா விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**பஸில் தரும் விளக்கம்?**

கோவிட் வைரஸ் பரவல் காரணமாக, உலகிலுள்ள அனைத்து நாடுகளும் பாரிய பொருளாதார பின்னடைவை சந்தித்துள்ள நிலையில், இலங்கைக்கு அந்த தாக்கம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவித்திட்டத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பொருளாதார ரீதியில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை காரணமாக, நிதி அமைச்சு பாரிய பிரச்னைகளை சந்தித்து வருவதாகவும் அவர் கூறுகின்றார்.

இவ்வாறான நிலையில், பாரிய பிரியத்தனங்களை மேற்கொண்டு, மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகின்றது.

மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய வகையில், பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான இயலுமை அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணத்தை வழங்க திட்டமிட்டதாக நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

**பொருளாதார நிபுணரின் பார்வை**

தற்காலிக நிவாரணத்தை வழங்கி, நீண்ட கால அடிப்படை யில் மக்களின் வாழ்விலை நிலையற்றதாக்கும் முயற்சியே, அரசாங்கத்தின் இந்த அறிவிப் பின் ஊடாக பார்க்க முடிகின்றது என கொழும்பு பல்கலைக்கழ கத்தின் பொருளியல் துறை விரிவுரையாளர் எம்.கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார்.



சுமார் ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான நிவாரண பொதியொன்றையே அரசாங்கம் நேற்றைய தினம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் வருமானம் மிக மிக குறைவாக மட்டத்தில் சென்றுக்கொண்டிருக்கும் இந்த தருணத்தில், இப்படியான ஒரு நிவாரண அறிவிப்பு பொருத்தமற்றது எனவும் அவர் கூறுகின்றார்.

சரிந்துக்கொண்டு செல்லும் தமது செல்வாக்கை, தக்க வைத்துக்கொள்ளும் முயற்சியாக பார்க்கக்கூடியதாக இருந் தாலும், இது நடைமுறை சாத்தியமற்ற முயற்சி எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

> **“காசு கிடைப்பதை எண்ணி மக்கள் சந்தோஷப் படலாம். ஆனால் பொருளாதாரம் என்று பார்க்கும் போது, அது மிக மோசமானதாக இருக்கும். ஒரு பில்லியன் டொலரை ஏதாவது ஒரு நாடு அன்பளிப்பாக வழங்குமாக இருந்தால், அதை இப்படி செலவிடுவது பரவாயில்லை. ஆனால், கடனை பெற்றோ அல்லது பணத்தை அச்சிட்டோ இவ்வாறான நிவாரணத்தை வழங்கும் போது அது எந்தவித பலனையும் ஏற்படுத்தாது**

“இந்த நிவாரணத்திற்கான பணம் எங்கிருந்து பெறப்பட போகிறது என்ற கேள்வி எழுகிறது. அதற்கு ஒரே வழி பணத்தை அச்சிடுவதுதான். அப்படி உள்நாட்டில் பணத்தை அச்சிட்டு வெளியிட்டு, பொதுமக்களுக்கு நிவாரணங்களை கொடுத்தால், பணவீக்கம் பல மடங்காக அதிகரிக்கும்” என கணேஷமூர்த்தி கூறுகின்றார்.

அரசாங்கம் இதனை தெரிந்து செய்கின்றதா? தெரியாமல் செய்கின்றதா? என ஒன்றுமே புரியவில்லை என அவர் குறிப்பிடுகின்றார்.

நாடு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பை நோக்கி நகர்ந்துக்கொண்டிருக்கும் தருணத்தில், இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்து வகைகளுக்கு முழுமையான வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனால், அரசாங்கத்திற்கான வருமானம் மேலும் குறைவடையும் அதே வேளை, நிவாரணம் வழங்குவதன் ஊடாக அரசாங்கத்தின் செலவு பல மடங்காக அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

இலங்கை அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகளுடன் தொடர்புடைய பொருளியல் நியாயப்படுமொன்று கிடையவே கிடையாது என அவர் குறிப்பிடுகின்றார்.


இவ்வாறான பொருளாதார பாதிப்பு காணப்படுகின்ற தருணத்தில், விலைகளை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, இவ்வாறான பாரிய நிவாரண பொதிகளை வழங்கி மக்களை ஏமாற்றக்கூடாது என எம்.கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார்.

“காசு கிடைப்பதை எண்ணி மக்கள் சந்தோஷப்படலாம். ஆனால் பொருளாதாரம் என்று பார்க்கும் போது, அது மிக மோசமானதாக இருக்கும். ஒரு பில்லியன் டொலரை ஏதாவது ஒரு நாடு அன்பளிப்பாக வழங்குமாக இருந்தால், அதை இப்படி செலவிடுவது பரவாயில்லை. ஆனால், கடனை பெற்றோ அல்லது பணத்தை அச்சிட்டோ இவ்வாறான நிவாரணத்தை வழங்கும் போது அது எந்தவித பலனையும் ஏற்படுத்தாது” என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை விரிவுரையாளர் எம். கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார். ■




# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

51) 
இவ்வுரு மூலம் காட்டப்படும் செயற்பாடு
1) கங்காரு போல் பாய்தல். 2) யானை போல் நடத்தல்.
3) நண்டு போல் முன்னால் செல்லல். 4) அட்டையைப் போல் செல்லல்.

52) புதுவருடத் தினத்தன்று "மருத்துநீரை" வைத்து நீராடும் மதத்தவர்
1) இந்துமக்கள் 2) பௌத்தர்கள் 3) இஸ்லாமியர்கள் 4. கத்தோலிக்கர்கள்

53) மின்னல் ஏற்படும் நேரங்களில் செய்யக் கூடாததும் புவியதிர்வு ஏற்படும் வேளையில் செய்ய வேண்டிய செயற்பாடாகவும் அமைவது
1) உயரத்தில் நிற்றல். 2) மின்னுபகரணங்களை உபயோகித்தல்
3) தொலைபேசியில் உரையாடுதல். 4) திறந்தவெளியில் நிற்றல்.


54) 
இப் படத்தில் காணப்படும் உரு
1. தென்னம்பொச்சினால் ஆக்கிய மாற்றுச்சாடி
2. டெங்கு நுளம்பு பெருகும் இடம்.
3. இளநீர்க் கோம்பை.
4. வாழை நாரில் ஆக்கப்பட்ட சாடி


55) இலங்கை அஞ்சல் திணைக்களத்தால் தந்திச்சேவைக்கு மாற்றீடாக அறிமுகப்படுத்தப்பட்ட சேவை
1) தொலைநகல் சேவை 2) தொலைபேசிச் சேவை
3) ரெலிமெயில் சேவை 4) பதிவுத்தபால் சேவை

56) சோலைவரி கட்டுவதற்காக கிராமத்திலுள்ளவர்களும் நகரத்திலுள்ளவர்களும் செல்ல வேண்டிய இடங்கள் முறையே
1) கிராம அலுவலர் அலுவலகம், பிரதேச செயலகம்
2) பிரதேச செயலகம், நகரசபை
3) பிரதேசசபை, நகரசபை
4) மாவட்டச் செயலகம், நகரசபை

57) விற்றமின் A குறைபாட்டினால் ஏற்படும் நோய்
1) கண்டமாலை 2) மரஸ்மஸ் நோய் 3) ஸ்கேவி 4) மாலைக்கண்

58) இப்படத்தில் காணப்படுபவை
1) உலர்மின்கலம், செப்புக்கம்பி, இரும்பாணி
2) உலர்மின்கலம். இரும்புக்கம்பி, செப்பாணி
3) உலர்மின்கலம், செப்புக்கம்பி, செப்பாணி
4) உலர்மின்கலம். இரும்புக்கம்பி, இரும்பாணி





59) 

இந்நீர்ப் பாத்திரத்தில் Aயிலும் Bயிலும் இருக்கத்தக்கவை முறையே
1) பலகைத்துண்டு, பனிக்கட்டி
2) பனிக்கட்டி, பலகைத்துண்டு
3) பனிக்கட்டி, எண்ணெயில் தோய்க்கப்பட்ட பஞ்சு
4) எண்ணெயில் தோய்க்கப்பட்ட பஞ்சு, பனிக்கட்டி


(30 புள்ளிகள்)

- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

1. 


2. 



- உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்கு உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?

3. 

உரு A உரு B

(1) 2 (2) 3 (3) 4

- 4, 5 ஆகிய வினாக்களில் வெறுமையாய் உள்ள அடைப்புக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

4. 


## விடைகள்

51. 1 52. 1 53. 4 54. 1
55. 3 56. 3 57. 4 58. 1 59. 2

1. (2) 2. (1) 3. (2) 4. (3)

## கல்வி tv CHANNEL-1

07.01.2022
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி tv CHANNEL - 2

07.01.2022
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## மல்வத்து அனுநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்ற ஜனாதிபதி கோட்டாபய

கொழும்பு, ஜன. 07
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முற்பகல் மல்வத்து விஹாரைக்குச் சென்று, அனுநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம்பெற்றுக்கொண்டார்.

இதன்போது, அனுநாயக்கத் தேரரினால் பிரித் பாராயணம் செய்யப்பட்டு, ஜனாதிபதிக்கு ஆசி வழங்கப்பட்டது.

அத்துடன், எதிர்கொள்ளக்கூடிய அனைத்துச் சவால்களையும் வென்று, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாக மஹா சங்கத்தினர் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று, ஜனாதிபதியிடம் அனுநாயக்க தேரர் தெரிவித்தார்.

இதேவேளை, மல்வத்து அனுநாயக்க தேரரான நியங்கொட விஜித்தசிறி தேரரையும் சந்தித்த ஜனாதிபதி, அவருடன் சுமூகக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஜனாதிபதியின் எதிர்காலத் திட்டங்களுக்கு ஆசி வழங்கிய விஜித்தசிறி அனுநாயக்க தேரர், ஜனாதிபதியின் வருகையை நினைவூட்டும் வகையில் நினைவுச் சின்னமொன்றை அன்பளிப்புச் செய்தார்.

அதனையடுத்து, கெட்டம்பே ராஜோபவனாராமயவுக்குச் சென்ற ஜனாதிபதி, ஸ்ரீ லங்கா ராமக்ஞ பீடத்தின் சிரேஷ்ட உறுப்பினர் வணக்கத்துக்குரிய கெப்பெட்டியாகொட சிறிவிமல தேரரைச் சந்தித்தார். இதன்போது, நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகள் தொடர்பில் ஜனாதிபதி விளக்கினார்.

புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவும் இந்தச் சந்திப்புகளில் கலந்துகொண்டார். (அ)

# போராட்டத்தை தற்காலிகமாக கைவிட அதிபர், ஆசிரியர் முடிவு

கொழும்பு, ஜன. 07
ஜனவரி 22 ஆம் திகதி வரை அனைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளையும் இடைநிறுத்த ஆசிரியர் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யாலேவெல பன்னசேகர தேரர், பல்வேறு தியாகங்களினால் இந்த வெற்றியை பெற்றுக்கொண்டதாக தெரிவித்தார்.

சுற்றறிக்கையின் ஊடாக, ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சம்பள அதிகரிப்பில் மூன்றில் ஒரு பங்கையே பெற்றுள்ளனர். இது அதிகாரிகளால் வழங்கப்பட்ட பலன் அல்ல என அவர் கூறினர்.

எனவே 1994 ஆம் ஆண்டு முதல் நிலவும் சம்பள முரண்பாடுகளை அதிகாரிகள் தீர்க்கும் வரை போராட்டத்தை தொடரப்போவதாக தேரர் குறிப்பிட்டார்.

சுபோதினி குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள சம்பள கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் போராட்டம் தொடரும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க கூறினார்.

இந்த சுற்றறிக்கையை வெளியிட்டமை நாடு முழுவதிலும் உள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்று கூறிய அவர், இப்போராட்டம் இப்போது ஓயாது என்றும் கூறினார்.

சுபோதினி குழு அறிக்கையின் பரிந்துரையை அமுல்படுத்துமாறு கோரிக்கை விடுத்த போதிலும், பரிந்துரைக்கப்பட்ட தொகையில் மூன்றில் ஒரு பகுதியே அவர்களுக்கு வழங்கப்பட்டதாக குறிப்பிட்ட ஜயசிங்க, எஞ்சிய கோரிக்கைகளை பெறுவதற்கான போராட்டம் தொடரும் என்றும் கூறினார். (அ)

## 18ஆம் திகதி கடனைச் செலுத்தினால் நாடு தரப்படுத்தலில் வீழ்ச்சியடையும்

கொழும்பு, ஜன. 07
ஜனவரி 18ஆம் திகதி இலங்கை செலுத்தவேண்டிய 500 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்தியதன் பின்னர், அந்நிய செலாவணி மேலும் குறைவடையும் என்று பொருளாதார நிபுணர் கலாநிதி நிஷாந்த டி மெல் தெரிவித்தார்.

இதன் காரணமாக இலங்கை தரப்படுத்தலில் மேலும் வீழ்ச்சியடையும் நிலை காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

கடன் செலுத்துவதனால் மட்டும் இப்பிரச்னை தீர்ந்துவிடாது எனவும் கடனைச் செலுத்தும் அளவுக்கு அந்நிய செலாவணி குறைவடையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)



## மன்னாரில் படுகொலை செய்யப்பட்ட மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவு

மன்னார், ஜன. 07
மன்னார் வங்காலை பகுதியில் 1985 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் அவருடன் சேர்த்து படுகொலை செய்யப்பட்ட அப்பாவி சிறுவர்கள் மற்றும் பொது மக்களின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று வியாழக்கிழமை நினைவு கூரப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை காலை 7 மணியளவில் வங்காலை புனித ஆனாள் தேவாலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு முன்பாக நினைவேந்தல் இடம் பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

இதன்போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், ஆயரின் செயலாளர் உள்ளடங்களாக அருட்தந்தையர்கள், பொதுமக்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.

அருட்பணி பஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். (அ)

## விபசாரம் செய்த இருவர் கைது!

கொழும்பு, ஜன.7
கொழும்பு, பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போக்குந்தரை பிரதேசத்தில் விபசார நிலையம் ஒன்று நேற்று முன்தினம் முற்றுகையிடப்பட்டு இரு பெண்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானவர்கள், கெசல்வத்தை, இரத்தினபுரி பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

கல்கிசை குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இரு வரும் கைது செய்யப்பட் டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கே)

## போதை வியாபாரிகள் கைது; பெருந்தொகை பணமும் மீட்பு!

கொழும்பு, ஜன.7
அம்பாந்தோட்டையின் தங்கல்லை, தெலிக்கடை ஆகிய பொலிஸ் பிரிவுகளில், போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

32, 60 வயது நபர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து சுமார் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் பணம், தங்க நகைகள் மற்றும் கைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மேலும், தங்கல்லை பொலிஸ் பிரிவில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், பலநாள் படகை பயன்படுத்தி போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அவரிடமிருந்து, 50 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் பணம், 10 கிராம் தங்க நகை, ஹெரோய்ன், தொலைபேசி என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தெலிக்கடை பகுதியில் கைதான நபரிடமிருந்து வெளிநாட்டு துப்பாக்கியின் 2 தோட்டாக்கள், 90 இலட்சத்து 2 ஆயிரத்து 800 ரூபாய் பணம், செய்மதி தொலைபேசி மற்றும் இரண்டு கைபேசிகள் என்பவற்றை பறிமுதல் செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கே)

## கொழும்பில் நாளை 16 மணி நேர நீர் வெட்டு!

கொழும்பு, ஜன.7
கொழும்பு மாவட்டத்தில் நாளை சனிக்கிழமை 16 மணி நேரம் நீர் வெட்டு நடைமுறையில் இருக்கும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

காலை 8 மணி முதல் நள்ளிரவு 12 கொழும்பு மாநகர சபை, தெஹிவளை - கல்கிசை மாநகர சபை, கோட்டை மாநகர சபை, கடுவலை மாநகர சபை, மஹரகம, பொரலஸ்கமுவ, கொலன்னாவ, கொட்டிகாவத்தை - முல்லேரியா ஆகிய பகுதிகளிலேயே நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது. (ஐ)

## உற்பத்தி, விநியோகத்தை விரைவாக்க நடவடிக்கை

### லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 07
சிலிண்டர்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை விரைவுபடுத்த தற்போதைய நிலையில் உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களிலும் இன்றும்(நேற்று) 220,000 உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவை விரைவில் நுகர்வோருக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அது வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளாந்த எரிவாயு தேவையை பூர்த்தி செய்வதற்காக எதிர்வரும் தினங்களில் நாள் ஒன்றுக்கு 90,000-100,000 வரை உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு வழங்குவதற்கு நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது நிலவும் எரிவாயு தட்டுப்பாடு பிரச்னை விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என அந்த நிறுவனம் நுகர்வோருக்கு அறிவித்துள்ளது. (அ)



## அமெரிக்காவில் அடுக்குமாடி குடியிருப்பில் பெரும் தீ பரவல்

### 8 சிறுவர்கள் உட்பட 13 பேர் பலி!

நியூயோர்க், ஜன. 07

அமெரிக்காவில் பென்சில்வேனியா மாகாணத்தில் பிலதெல்பியா பகுதியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 8 சிறுவர்கள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

உள்நாட்டு நேரப்படி நேற்று முன் தினம் புதன்கிழமை காலை 6.40 மணியளவில் பிலதெல்பியா பகுதியில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பின் இரண்டாவது தளத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று 50 நிமிடங்கள் கடும் போராட்டத்துக்குப் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீ விபத்தில் 7 சிறுவர்கள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர் என பிலதெல்பியா தீயணைப்பு துறை தெரிவித்துள்ளது. மேலும் 2 பேர் பலத்த காய மடைந்து தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் அந்த அடுக்குமாடி குடியிருப்பில் 4 தீ கண்டறியும் கருவிகள் இருந்துள்ளன. அவை வேலை செய்யாததே உயிரிழப்புகளுக்கு காரணம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

## விண்வெளி மைய கட்டுமானப் பணிகளை இவ்வாண்டு நிறைவு செய்ய சீனா திட்டம்!

பீஜிங், ஜன. 07

சீனா சொந்தமாக அமைத்து வரும் விண்வெளி நிலையத்தின் கட்டுமானப் பணிகளை இந்த ஆண்டு இறுதிக்குள் முழுமையாக முடிக்க திட்டமிட்டுள்ளதாக சீன விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இவ்வாண்டில் 40 க்கு மேற்பட்ட ஏவூர்திகளை விண்வெளி மையத்துக்கு அனுப்பவும் சீனா திட்டமிட்டுள்ளது. மனிதர்களையும் ஆய்வுப் பணிகளுக்கான விண்வெளியில் களமிறக்கவும் சீனா முடிவு செய்துள்ளது.

புதிய ஆண்டுக்கான தனது விண்வெளி ஆய்வுத் திட்டங்கள் தொடர்பாக தகவல்களை சீன விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் அண்மையில் வெளியிட்டது. அதிலேயே இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை அன்று சீனா 2021 ஆம் ஆண்டில் தனது கடைசி விண்வெளி ஏவுதல் பணியை மேற்கொண்டது. சீனாவின் 55 ஆவது விண்வெளி ஏவூர்தியான லோங் மார்ச் 3பி பரிசோதனை வடிவிலான செயற்கைக்கோளுடன் விண்ணில் ஏவப்பட்டது. இதன் மூலம் உலகில் எந்த நாட்டிலும் இல்லாதவாறு சீனாவின் லோங் மார்ச் ஏவூர்திகள் அதிக தடவைகள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன. (அ)





## 8 நாடுகளின் விமானசேவைக்கு தடை போட்டது ஹொங்கொங்


இந்தியா உள்ளிட்ட 8 நாடுகளில் இருந்து வரும் விமானங்களுக்கு ஹொங்கொங் அரசு தடை விதித்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளிடமிருந்துதான் ஒமைக்ரொன் தொற்று அதிகம் பரவுவதாக குறிப்பிட்டுள்ள ஹொங்கொங் அரசு, நோய்தொற்று பரவுவதை தடுக்கும் வகையில் இந்தியா, அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், அமெரிக்கா, பாகிஸ்தான், இங்கிலாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய 8 நாடுகளில் இருந்து வரும் விமானங்களுக்கு தடை விதிப்பதாக அறிவித்துள்ளது.

இந்த உத்தரவு எதிர்வரும் சனிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் என்றும், 2 வாரங்களுக்கு அமுலில் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது. (அ)

# எரிபொருள் விலை உயர்வினால் வெடித்தது பொதுமக்கள் புரட்சி!



### கவிழ்ந்தது கஜகஸ்தான் அரசு



நுர் சுல்தான், ஜன. 07

எரிபொருள் விலை உயர்வை கண்டித்து கஜகஸ்தானில் பெரும் போராட்டம் வெடித்த நிலையில் அதனைச் சமாளிக்க முடியாமல் பிரதமர் அஸ்கர் மாமின் தலைமையிலான அரசு ராஜினாமா செய்துள்ளது.

போராட்டங்களைக் கட்டுப்படுத்தும் முகமாக அங்கு அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளபோதும் தொடர்ந்தும், ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன.

இதையடுத்து அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இணைய வசதிகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

எண்ணெய் வளங்களை கொண்ட மத்திய ஆசிய நாடுகளுள் ஒன்றான கஜகஸ்தானில் புத்தாண்டு முதல் திரவ பெற்றோலிய எரிவா யுக்கான விலை அதிகரித்தது. இதற்கு அந்நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதி நாடான கஜகஸ்தானில் விலை உயர்வு நியாயமே இல்லை எனக் கூறி மக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். விலை உயர்வை எதிர்த்து தலைநகர் அல்மாட்டி மற்றும் மேற்கு மாகாணமான மங்கிஸ்டா உள்ளிட்ட பல நகரங்களில் பலஆயிரக்கணக்கானோர் வீதிகளில் இறங்கி போராடினர்.

போராட்டக்காரர்களால் தலைநகர் அல்மாட்டி மாநகராட்சி அலுவலகம் தீ வைத்து எரிக்கப்பட்டது. மேலும் அரச கட்டடங்கள், வாகனங்கள் எரிக்கப்பட்டன. போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

போராட்டத்தை கட்டுப்படுத்த முயன்ற பொலிஸாருக்கும் - பொது மக்களுக்கும் இடையே பெரும் மோதல் வெடித்தது. பொலிஸார் கூட்டத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர்.

எனினும் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் திரண்டதால் வேறு வழியின்றி பிரதமர் அஸ்கர் மாமின் தலைமையிலான அரசு ராஜினாமா செய்துள்ளது.

இந்த ராஜினாமாவை கஜகஸ்தான் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோகாயேவ் ஏற்றுக் கொண்டார்.

இதையடுத்து அந்த நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. மக்கள் நடமாட தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் எரிவாயு விலையை கட்டுப்படுத்துமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளை, அரசுக்கு எதிரான போராட்டம் சில தரப்புகளின் தூண்டுதலாலேயே இடம்பெற்றதாக ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோகாயேவ் விமர்சித்துள்ளார். இந்த எதிர்ப்புக்கள் நாட்டின் வரலாற்றில் ஒரு கரும்புள்ளி எனத் தெரிவித்த அவர், சதிகாரர்களுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

ஜனாதிபதி என்ற முறையில், எங்கள் குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் அமைதியைப் பாதுகாக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். கஜகஸ்தானின் ஒருமைப்பாடு பற்றி கவலைப்படுகிறேன் என நேற்று தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி காசிம்-ஜோமார்ட் டோகாயேவ் தெரிவித்தார். இதேவேளை, அரச எதிர்ப்பு போராட்டக்காரர்களை தீவிர வாதிகள் என வர்ணித்த அல்மாட்டி நகரின் பொலிஸ தலைமை அதிகாரி கனாட் டைமர் டெனோவ், அவர்கள் 500 பொது மக்களைத் தாக்கி நூற்றுக்கணக்கான வணிக நிறுவனங்களை சூறையாடியதாக குற்றஞ்சாட்டினார். (அ)

# உலக சுகாதார அமைப்பின் தடுப்பூசி இலக்கை எட்டாத ஆபிரிக்க நாடுகள்!

நியூயோர்க், ஜன. 07

டிசெம்பர் 2020ஆம் ஆண்டு இறுதிக்குள் எல்லா நாடுகளிலும் 40 சதவீத தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்கிற உலக சுகாதார அமைப்பின் இலக்கை, பெரும்பாலான ஆபிரிக்க நாடுகள் தவற விட்டுள்ளன.

ஆபிரிக்க கண்டம் முழுவதும் இதுவரை 9 சதவித மக்கள் மட்டுமே முழுமையாக கொரோனா தடுப்பூசி செலுத்தியுள்ளனர்.

ஆபிரிக்க கண்டத்திலேயே ஏழு நாடுகள் மட்டுமே 40 சதவீத இலக்கை எட்டியுள்ளன. அதிலும் மூன்று நாடுகள் சிறு தீவுகள், அங்கு போக்குவரத்து சிக்கல்கள் பெரிதாக இல்லை.

செய்சில்லெஸ், மொரீஷஸ் ஆகிய நாடுகளின் மொத்த மக்கள்தொகையில் 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட மக்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளனர். கேப் வெர்டே நாட்டில் கிட்டத்தட்ட 45 சதவீத பேர் தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளனர்.

அதுபோக, ஆபிரிக்க கண்டத்தின் மையத்தில் அமைந்துள்ள நாடுகளில் மொராக்கோ, துனீசியா, போட்ஸ்வானா, ருவாண்டா ஆகிய நாடுகள் மட்டுமே இலக்கை கடந்துள்ளன.

ஆபிரிக்க கண்டத்தின் தெற்கு பகுதியில் உள்ள நாடுகள், சகாராவுக்கு கீழே உள்ள ஆபிரிக்க நாடுகளை விட ஒப்பீட்டளவில் சிறப்பாக செயற்பட்டுள்ளன.

டிசெம்பர் 30ஆம் திகதி நிலவரப்படி, ஆபிரிக்க கண்டத்தில் உள்ள கிட்டத்தட்ட பாதி நாடுகள், சுமார் 10 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் மட்டுமே தடுப்பூசி செலுத்தியுள்ளனர். ஆபிரிக்க கண்டத்தில் உள்ள பல நாடுகளில் (அக்கண்டத்தின் பெரிய நாடுகளும் இதில் அடக்கம்) மொத்த மக்கள் தொகையில் 5 சத வீத பேருக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தியுள்ளனர்.



# கவாஜா அதிரடி சதம்; ஆஸி. வலுவான நிலை!



சிட்னி, ஜன. 07

உஸ்மான் கவாஜாவின் அபாரமாக அடித்த சதத்தின் உதவியால் அவுஸ்திரேலிய அணி 416 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஷ் தொடர் அவுஸ்திரேலியாவில் நடக்கிறது. 5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் மூன்று போட்டிகளை அவுஸ்திரேலியா வெற்றி கொண்ட நிலையில் நான்காவது போட்டி தற்போது நடக்கிறது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்டம் முடிவில் 126 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

ஸ்ரீவன் ஸ்மித் 6 ஓட்டங்கள் - உஸ்மான் கவாஜா 4 ஓட்டங்களுடன் நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்தனர். இருவரும் நிலைத்து ஆடி இங்கிலாந்து பந்துவீச்சாளர்களை திணறடித்தனர்.

சிறப்பாக ஆடி அரைச்சதங்களை இருவரும் கடந்த நிலையில், ஸ்ரீவன் ஸ்மித் 67 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரோட்டின் பந்தில் ஆட்டமிழந்தார். ஆனால் மறுமுனையில் உஸ்மான் கவாஜா நிலைத்து ஆடினார். பின்னர் வந்த வீரர்களும் ஓரளவு போராடவே, கவாஜா தனது 9ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

13 பௌண்ட்ரிகளுடன் அவர் 137 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

134 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்த அவுஸதிரேலியா 416 ஓட்டங்களை குவித்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. மிற்சல் ஸ்ரார்க் 34 ஓட்டங்களையும், நதன் லியோன் 16 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் பிரோட் 5 விக்கெட்களையும், அண்டர்சன், மார்க் வூட் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 5 ஓவர்கள் நிறைவில் 13 ஓட்டங்களைப் பெற்றது. ஹசீப் ஹமீத் 2, ஷாக் கிராவ்லி 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டமாகும்.



## இந்தியாவுடனான டெஸ்ட்:

# தென்னாபிரிக்காவுக்கு வெற்றிவாய்ப்பு பிரகாசம்!

ஜொகன்னஸ்பேர்க், ஜன. 07

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. ஆனாலும், நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. முதல் போட்டியை இந்தியா வென்ற நிலையில், இரண்டாவது போட்டி ஜொகன்னஸ்பேர்க்கில் நடக்கிறது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இனிங்ஸில் 202 ஓட்டங்களுக்க சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 229 ஓட்டங்களைப் பெற்றது.

தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய 266 ஓட்டங்களைப் பெற்றது. புஜரா 53, ரஹானே 58 ஓட்டங்களைப் பெற ஹனுமா விகாரி ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களைப் பெற்றார்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ரபாடா, நிகிடி, ஜான்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்க அணி 40 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

டீன் எல்கர் 46, வான் டெர் டுசென் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

ஆனால், நேற்று நான்காம் நாள் ஆட்டம் மழையால் மதியம் தாண்டியும் ஆரம்பிக்கப்படவில்லை. இன்று போட்டியின் ஐந்தாம் நாள் ஆட்டமாகும். (ஐ)



# மீண்டார் மெஸ்ஸி!

பாரிஸ், ஜன. 07

பிரபல உதைபந்தாட்ட வீரர் மெஸ்ஸி, கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டுவிட்டாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதைபந்தாட்ட உலகின் ஜாம்பவான் வீரர்களில் ஒருவராகக் கருதப்படும் மெஸ்ஸி தற்போது பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்காக விளையாடி வருகின்றார். அவருக்கு அண்மையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனால், அவர் பாரிஸ் அணிக்காக சில போட்டிகளில் விளையாடவில்லை.

இந்த நிலையில், அவருக்கு இரு வாரங்கள் கழித்து நடத்தப்பட்ட பரிசோதனையில் தொற்று இல்லை என்பது உறுதியாகியுள்ளது. இதனால் இன்னும் சில நாட்களில் அவர் அணியுடன் இணைவார் என்று பாரிஸ் சென். ஜெர்மைன் அணி அறிவித்துள்ளது. (ஐ)



# இலங்கை அணியின் போட்டி அட்டவணை!

கொழும்பு, ஜன. 07

இலங்கை கிரிக்கெட் அணியின் 2022 ஆம் ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் அட்டவணை ஜனவரி மாதம் சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடருடன் சொந்த மண்ணில் ஆரம்பமாகவுள்ளது.

அதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு இலங்கை சுற்றுப் பயணம் மேற்கொள்ளும். அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 2022 ஜூன் - ஜூலை மாதங்களில் நடைபெறவுள்ள மூன்று வடிவங்களினாலான தொடருக்காக இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்.

இதன் பின்னர் ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணி இலங்கை வரும்.

மேலும் 2022 ஓகஸ்ட் - செப்ரெம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய கிரிக்கெட் சபை நடத்தும் இருபது-20 ஆசியக் கிண்ண தொடரிலும் இலங்கை அணி விளையாடும்.

ஆசிய கிண்ணத்தை தொடர்ந்து, 2022 ஐ.சி.சி. ஆண்களுக்கான இருபது -20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்க இலங்கை அணி அவுஸ்திரேலியா செல்கிறது. பின்னர், இலங்கை அணி 2022 ஆம் ஆண்டிற்கான கடுமையான சர்வதேச கிரிக்கெட் நாட்காட்டி இந்தியாவுக்கான சுற்றுப் பயணத்துடன் டிசெம்பரில் நிறைவுக்கு கொண்டு வரும். (ஐ)

# ஆஸி. ஓப்பனில் பங்கேற்க முடியாது ஜொகோவிச் நாடு கடத்தப்படுகிறார்!

சிட்னி, ஜன. 07

உலகின் முதல்நிலை வீரரான நோவக் ஜொகோவிச் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவதற்காக வழங்கப்பட்டிருந்த வீசா நேற்று இரத்து செய்யப்பட்டது.

இதனால் அவர் மெல்பர்னில் நடக்கும் அவுஸ்திரேலிய ஓப்பன் தொடரில் பங்கேற்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான, அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பங்கேற்கும் வீரர்களுக்கும், போட்டியை காணவரும் ரசிகர்களுக்கும் கோவிட்-19 தடுப்பூசி போட்டிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து வீரர் - வீராங்கனைகளும் தடுப்பூசி செலுத்தப்பட்டதை உறுதி செய்துள்ளனர்.

ஆனால், முதல்நிலை வீரரும், 9 முறை அவுஸ்திரேலிய ஓப்பனை வென்றவருமான சேர்பிய வீரர் நோவக் ஜொகோவிச் தடுப்பூசி செலுத்தினாரா? இல்லையா? என்பதை வெளிப்படையாக தெரிவிக்காமல் இருந்தார்.

இதனால் அவர் அவுஸ்திரேலிய ஓப்பனில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்நிலையில், கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் இருந்து ஜொகோவிச்சுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தடுப்பூசி செலுத்தாமல் அவுஸ்திரேலிய ஓப்பனில் விளையாட அனுமதி கிடைத்திருப்பதாக ஜொகோவிச் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந் நிலையிலேயே மெல்பர்ன் சென்றடைந்த ஜொகோவிச் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவதற்கான வீசா நேற்று இரத்துச் செய்யப்பட்டது. இதனால் அவர் போட்டியில் பங்கெடுப்பதற்கான வாய்ப்பு இல்லாமலாக்கப்பட்டுள்ளது. (ஐ)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**மலர்வு**
**25 - 03 - 1933**

**உதிர்வு**
**09 - 12 - 2021**

### அமரர் ஆறுமுகம் அந்தோனிப்பிள்ளை

(Anto அக்கா)

*சுன்னாகம் - யாழ்ப்பாணம்*

**(முன்னாள் மூத்த தாதி உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை)**

*"அன்பும் நட்பும் எங்குள்ளதோஅங்கே இறைவன் இருக்கிறார்"*

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தமது இரங்கலை எம்முடன் பகிர்ந்து கொண்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றியை எமது குடும்பத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி திருப்பலி (08.01.2022) அன்று மு.ப 10.00 மணிக்கு மல்வம் / திருக்குடும்ப ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் அதைதொடர்ந்து இல்லத்தில் (உடுவில்) நடைபெறவிருக்கும் அஞ்சலிக் கூட்டத்திலும், மதிய போசன விருந்து பசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*இல. 445,*
*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொடர்புகளுக்கு :*
**077 728 1617**

*"அன்ரனி வாசா"*
*நாகம்மாள் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.*

*தகவல்:*
**குடும்பம் சார்பாக,**

# எரிவாயு அடுப்பு நேற்று மன்னாரில் வெடித்தது!

## பெண் கூலி தொழிலாளியின் வீடு எரிந்து நாசம்

*மன்னார், ஜன. 07*

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தரவான் கோட்டை பகுதியில் நேற்று வியாழக்கிழமை மதியம் எரிவாயு வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியது.

தரவான் கோட்டை பகுதியை சேர்ந்த கூலித் தொழிலில் ஈடுபடும் பெண் ஒருவரின் வீட்டில் மேற்படி எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிப்பு சம்பவம் காரணமாக வீடு முற்றாக எரிந்து நாசமானதை அடுத்து குறித்த பெண் அதிர்ச்சிடைந்து மயக்கமுற்ற நிலையில் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

குறித்த பெண் வீட்டில் தனிமையில் வசிப்பதுடன் பனம் பொருள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்.

பெண்ணின் முழு வீடும் எரிந்து நாசமாகியுள்ள நிலையில் அருகில் இருந்த கிராம மக்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது.



எனினும் வீட்டில் இருந்த பெறுமதி வாய்ந்த பொருட்கள் தீயில் கருகிவிட்டன.

மன்னார் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் , நகர சபை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

## கண்டியில் எரிவாயு அடுப்பு வெடிப்பு!

*கொழும்பு, ஜன.07*

கண்டி, புப்புரஸ்சை டெல்டா தோட்டம் டேசன் பிரிவில், வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இரவு உணவு தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த போதை எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது.

இந்த சம்பவத்தில் எவருக்கும் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)



## வவுனியாவில் வீடு புகுந்து தாக்கி தங்க நகைகள், பணம் கொள்ளை

### குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதி

*வவுனியா, ஜன. 07*

வவுனியா புதுக்குளம் தேவகுளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்த திருடர்கள் வீட்டிலுள்ளவர்கள் அணிந்திருந்த தங்க நகைகள், பணம் என்பனவற்றை கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது .

வவுனியா புதுக்குளம் தேவதளம் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 11 மணியளவில் வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்த திருடர்கள் வீட்டிலுள்ளவர்களை தாக்கி அவர்கள் அணிந்திருந்த எட்டு பவுண் தங்க நகைகள் உட்பட பதினோராயிரம் ரூபா பணம் என்பனவற்றை கத்திமுனையில் கொள்ளையிட்டு , தப்பிச்சென்றுள்ளனர். இது குறித்து ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருடர்கள் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த குடும்பஸ்தரான சிறீஸ்கந்தவா சன் (வயது-59) வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

இச்சம்பவம் குறித்து தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மோப்ப நாய் சகிதம் மேலதிக விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (அ)

*எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

**காளிமாதா ஜோதிட நிலையம்**





**இந்திய பிரபல்யமான பாரம்பரிய**

**கண்ணன் பொதுவாழ்தாஸ்**

ஜாதம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

**இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை**
**அர்ச்சனா ஜுவலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)**
**075 217 1943**

**மணமக்கள் தேவை**

இந்து, கிறிஸ்தவர் அனைத்து இனத்தவர்களில் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், விரிவுரையாளர், ஆசிரியர், வங்கி, அரச/ தனியார் துறை, வெளிநாடுகளில் குடியுரிமையுடையவர்கள், சுயதொழில், (சைவபோசனம்), செவ்வாய்தோஷம், விவாகரத்து, மறுமணம் முதற்கொண்டு வரண்களின் விவரங்களுக்கு உடன் அனுகவும்.

**Shivalaya International**
Marriage Bureau
82/3, Mill Lane. Mallakam, Jaffna
**077 969 4009/ 076 652 8901**

ஈழநாடு
Eelanadu

# ஒய்வு வயதெல்லை நீடிப்பு; சுற்றறிக்கை வெளியானது

கொழும்பு, ஜன. 07


அரச உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 65ஆக நீடிப்பதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இது வெளியிடப்பட்டுள்ளது.

ஓய்வூதிய திருத்தச் சட்டத்துக்கு அமைவாக கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைவாக குறித்த தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

அதற்கமைய, ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65ஆக நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்



### முத்தையா சாள்ஸ் இரட்ணராசா (குஞ்சு)

யாழ். சாவகச்சேரி நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சாள்ஸ் இரட்ணராசா அவர்கள் 29.12.2021 புதன்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா (ஓவசியர்) - லில்லி பவளம் தம்பதியரின் அன்பு மகனும், வேதநாயகி(வேதா) அவர்களின் அன்புக் கணவரும், லில்லி டிலானி(பிரான்ஸ்), பிலிப், தர்மபாலன்(பிரான்ஸ்), ஏனஸ்ட் சஞ்சீவ்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 07.01.2022 வெள்ளிக்கிழமை அன்று பி.ப 03:00 மணியளவில் நுணாவில் அமெரிக்கன் சிலோன் மிஷன் தேவாலய நல்லாயன் மண்டபத்தில் நடைபெற்று பின்னர் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**வீடு - குடும்பத்தினர்**
Mobile : +94212057506

தகவல்:
**குடும்பத்தினர்.**



# கோப்பாயில் வீட்டின் கூரைக்குள் மறைக்கப்பட்ட கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 07

கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள வீடொன்றின் கூரைக்குள் இருந்து கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. வீட்டுக்குள் மழை ஒழுக்கு காணப்பட்டமையால் அதன் "சீற்"றை மாற்றியபோதே கைக்குண்டு கண்டுபிடிக் கப்பட்டது.

இந்த விடயம், பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொலிசார் கைக்குண்டை மீட்டனர்.

2016ஆம் ஆண்டிலேயே அந்த வீட்டை குடியிருப்பாளர்கள் வாங்கியுள்ளனர். யுத்த காலத்தில் இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் அந்த வீட்டில் தங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்பபட்டது. (ஐ- 3)

# அரசி விலை ரூ. 300 வரை உயரும்!

கொழும்பு, ஜன. 07

புத்தாண்டு காலத்தில் ஒரு கிலோகிராம் அரிசியின் விலை 300 ரூபாய் வரை உயர்வடையும் சாத்தியம் உள்ளதாக ஒன்றிணைந்த அரிசி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா தெரிவித்தார்.

சேதன பசளை திட்டத்தின் காரணமாக விவசாயிகள் பாரிய நெருக்கடியை எதிர் கொண்டுள்ளார்கள். பிரதான நெல் செய்கை பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் விவசாய நடடிவக்கையில் இருந்து விலகியுள்ளார்கள்.

இம்முறை பெரும்போக விவசாயத் தில் அதிக விளைச்சலை பெற முடியாது. விவசாயிகள் தங்களின் சுய தேவைக்காக மாத்திரமே விளைச்சலை மேற்கொண்டுள்ளார்கள்.

டொலர் நெருக்கடி காரணமாக மக்கள் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு தற்போது வரிசை யில் நிற்கிறார்கள்.

இந் நிலையில் எதிர்வரும் மாதம் முதல் பொது மக்கள் அரிசியை பெற்றுக் கொள்வதற்காகவும் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கோவிட் -19 வைரஸ் தாக்கத்தை தொடர்ந்து நாடு பாரிய அழிவை நோக்கி செல்லும். இயற்கை காரணிகளால் அந்த அழிவு ஏற்படாது. அரசாங் கத்தின் தவறான விவசாய கொள்கை திட்டத்தால் முழு நாடும் பெரும் அழிவை நோக்கி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ)

# வெலிக்கடை சிறை படுகொலை தீர்ப்பு 12ஆம் திகதிக்கு தவணை!

கொழும்பு, ஜன. 07

வெலிக்கடை சிறைச்சாலை படு கொலைகள் தொடர்பான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 12ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் 2012ஆம் ஆண்டு இடம்பெற்றவை எனக் கூறப்படும் 8 பேரின் படுகொலைகள் தொடர்பில், முன்னாள் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நியூமால் ரங்க ஜீவ மற்றும் மகஸின் சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சர் லமாஹேவகே எமில் ரஞ்சன் ஆகியோருக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்படுவதாக இருந்தது.

இந்த வழக்கு நேற்று முற்பகல் 11 மணிக்கு கொழும்பு மேல் நீதிமன்றின் 6 ஆம் இலக்க விசாரணை அறையில் விசாரணைக்கு வந்தது. மேல் நீதிமன்ற நீதிபதிகளான கிஹான் குலதுங்க தலைமையிலான பிரதீப் ஹெட்டி ஆரச்சி, மஞ்சுள திலகரத்ன ஆகியோர் அடங்கிய சிறப்பு ட்ரயல் அட் பார் நீதிமன்றம் வழக்கின் தீர்ப்பை அறிவிப்பதாக இருந்தது.

இதன்போது திறந்த மன்றில் பேசிய தலைமை நீதிபதி கிஹான் குலதுங்க, இந்த வழக்கின் தீர்ப்பு எழுதப்பட்டு முடிக்கப்பட்டுள்ள போதும், தட்டச்சு பிழைகள் உள்ளிட்டவற்றை நீக்க சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே, தீர்ப்பு பூரணமாக தயாராகாத நிலையில் வழக்கின் தீர்ப்பை பிறிதொரு தினத்தில் அறிவிப்பதாக தெரிவித்தார். இதன்படியே, தீர்ப்பை எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு அறிவிப்பதாக நீதிபதி அறிவித்தார். (ஐ)




## மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 04 . 1932



மறைவு
04 . 01 . 2022

### திருமதி வீரசிங்கம் எலிசபேத் (மேரிப்பிள்ளை)

யாழ். நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் எலிசபேத் அவர்கள் 04.01.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தர்மரியாம்பிள்ளை - மரியசலோமை (பொன்னரியம்) தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை - சம்பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற S.E.J. வீரசிங்கம்(முன்னாள் யாழ் மாநகரசபை துணை முதல்வர், சமாதான நீதவான்) அவர்களின் அன்பு மனைவியும், கனடாவைச் சேர்ந்த சிங்கராணி, மேரிராணி, எதிர்சிங்கம், காலஞ்சென்ற ஜாண்சன் மற்றும் ராஜன், இந்திரா, காலஞ்சென்ற ராசா, மகேந்திரன், மனோன், காலஞ்சென்ற செல்லம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான தங்கத்தா, தங்கமணி, பிலிப் முத்துராசா, வேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அதிரியாம்பிள்ளை, ஆசீர்வாதம், நவரெட்ணம், பூரணம், துரைசிங்கம், பாலசிங்கம், அமலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,குணசிங்கம், ஆசீர் அன்ரனி, புஸ்பா, கிறிஸ்ரெலா, டிடாக்கஸ் அஞ்சலீனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,ஷெல்லிபாரதி, லக்சி, அனா, எதிராஜ், அன்ரனிராஜ், யோசப்ராஜ், பிரகாஷ், அன்ரனிஸ்ரன், நொறிசியா, அனுசா, மாதுஜன், டார்வின், செல்சியா, டிருசன், றொனாட், நிலோ, நிவேதா, கருணா ஆகியோரின் அன்புப் பேத்தியும்,எட்வேட், கைறா, எவலீன், மேக்னா றெயிசோ, உதயப்பிரியா, லியோறஸ், தியடோர் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு
Friday, 07 Jan 2022 5:00 PM - 9:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada
Saturday, 08 Jan 2022 8:30 AM - 11:30 AM
Holy Redeemer Church 796 Eyer Dr, Pickering, ON L1W 3C2, Canada

தகனம்
Saturday, 08 Jan 2022 12:00 PM
Christ the King Catholic Cemetery 7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சிங்கராணி - மகள்**
Mobile : +16472863034
**மேரிராணி - மகள்**
Mobile : +14168480209
**எதிர்சிங்கம் - மகன்**
Mobile : +14372274834
**ஜாண்சன் கிறிஸ்ரெலா - மருமகள்**
Mobile : +16472859325
**ராஜன் - மகன்**
Mobile : +16477041688
**டிடாக்கஸ் இந்திரா - மகள்**
Mobile : +16479632699

தகவல்:
**குடும்பத்தினர்.**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மாகாண சபையை...

ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எமக்கான அரசியல் தீர்வு ஒன்று கிடைக்காமல் விட்டால் முழுமையாக எமது வேலைத்திட்டங்களை செய்ய முடியாது. கடந்த 74 ஆண்டுகளாக இந்தத் தீர்வு நிலைமை தொடர்ந்து வருகின்றது. எமக்கான அதிகாரங்கள் எமது கைகளில் இருக்க வேண்டும்.

எமக்கு மாகாண சபையின் ஊடாக நிதி அதிகாரமிருந்தால் நாங்கள் ஆளுநரிடம் பிச்சை கேட்பது அவசியமில்லை. சில விடயங்களை நாம் காலில் விழுந்து கேட்டால்கூட கிடைக்கப்பெறாத நிலைமையே உள்ளது.

எதிர்வரும் மாகாண சபை தேர்தலாக இருக்கட்டும் அல்லது அரசியல் தீர்வாக இருக்கட்டும் இரு சமூகமும் ஒன்றாக இருக்காவிடின் தமிழ் பேசாத ஒரு முதலமைச்சர் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. அது ஒரு சதித்திட்டமாகும் - என்றார். (ஐ)

## இனப் பிரச்னைக்கு...

பொறுப்புக்களிலிருந்து தவறிவிட்டோம். இது பற்றிய சுயபகுப்பாய்வு தங்களிடம் உள்ளது என்றும் கூறியுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரவித்தார்.

அதிகாரப் பகிர்வு குறித்து அவர் கூறுகையில், சமஷ்டி முறைமையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை, ஆனால் அவர்கள் சமமான அரசியல் உரிமைகள் மற்றும் அதிகாரத்தை வைத்திருப்பதற்கான உரிமைகளை நாங்கள் உத்தரவாதம் செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் சமஷ்டி முறைமை மூலம் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடி யாது

அத்துடன், தற்போதைய அரசமைப்பில் மாகாண சபை முறைமை உள்ளது. அது ஒரு தோல்வியுற்ற நிர்வாக முறைமையாகும். தேசிய நெருக்கடியிலும்கூட இதுவொரு தோல்வியாகும். ஆனால், அது அவர்களின் உரிமை என்று அந்த மக்கள் நம்பினால், மாகாணசபை முறை இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இறுதிப் போரின்போது நடந்தவைகளுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், நாங்கள் ஒரு தீவிரமான அரசியல் இயக்கம். யுத்தத்தின்போது இராணுவமும் அரசாங்கமும் ஒரே பிரிவாக செயல்படுகின்றன. சாதாரண பொதுமக்கள் மோதலில் சிக்கி உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. ஓர் இடதுசாரி அமைப்பாக நாம் இதைப் பற்றி இன்னும் தீவிரமாகச் சிந்தித்திருக்க வேண்டும், நாம் இன்னும் எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும். இந்தப் பிரச்னைகளில் கவனம் செலுத்தத் தவறியது எங்கள் பக்கம் உள்ள குறைபாடுகள் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் - என்றார். (ஐ)

## டொலருக்கு...

அனுப்பினாலும் அரசாங்கம் எதிர்பார்க்கும் டொலர் வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியாது என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்காக மூன்று இலட் சம் பேரை அனுப்புவதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

டொலரின் பெறுமதி கறுப்புச்சந்தையில் 240 ரூபாய் தொடக்கம் 245 ரூபாய் வரை இருக்கும்போது, டொலர் ஒன்றுக்கு 203 ரூபாய்க்கு யார் இங்கு பணம் அனுப்பப்போகின்றார்கள்.? அதனால், வெளிநாட்டு தொழிலாளர்கள் அனுப்பும் ஒரு டொலருக்கு குறைந்த பட்சம் 240 ரூபாய் வழங்க வேண்டும் என நான் அமைச்சரவைக்கு பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றேன் - என்றும் கூறினார். (ஐ)

## தேசிய பால்...

கால்நடைகளின் தீவனத்துக்காக மக்காச் சோளத்தை இறக்குமதி செய்யத் தேவையான டொலர் தட்டுப்பாடு காரணமாகக் கால்நடைகளுக்கு போதிய தீவனம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமைக்கு மத்தியில் கால்நடைகளுக்கு மக்காச் சோளத்துக்குப் பதிலாக மக்காச்சோள மரங்களை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என் றும் தெரிவிக்கப்பட்டது.

கால்நடை தீவனத்துக்கு மக்காச் சோளத்தைக் கொள்முதல் செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், விலை கொடுத்து கொள்வனவு செய்ய இதுவரை டொலர் வழங்காததால் இந்த நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஆரியகுளத்தில்...

டாமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசியக்கட்சியின் செயலாளர் நாயகமுமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஆரிய குளப்புனரமைப்பு திறப்பு விழாவில் கலந்து கொள்ள வருகின்ற பொழுது சிங்களபௌத்த எஜமான்களை திருப்திப்படுத்துவதற்காக ஆளுநர் கண்டிய மேளதாளங்களுடன் வந்தபோது, சரி வந்து விட்டு போகட்டும் என்று விட்டுவிட்டோம்.

அன்றையதினம் குளத்தை திறக்க வந்திருந்த பொழுது ஆளுநர் யாருடைய ஆளுகைக்குள் ஆரியகுளம் உள்ளது என்பதைப் பற்றி விசாரித்து இருக்கலாம். ஆனால் விடிய விடிய இராமர் கதை விடிந்தால் ராமன் சீதைக்கு என்ன முறை என்பது போலவே ஆளுநரின் செயல்பாடு காணப்படுகின்றது.

யாழ் மாநகர முதல்வர் ஆரியகுள அழைப்பிதழை வழங்கிய பொழுது இது யாருடைய ஆளுகைக்குள் இருந்தது என்பதை அவரிடம் கேட்டிருக்க வேண்டும். பௌத்தர்கள் விரும்பினால் விகாரைக்கும் இந்துக்கள் விரும்பினால் ஆலயங்களுக்கும் கிறிஸ்தவர்கள் தேவாலயங்களுக்கும் முஸ்லிம்கள் பள்ளிவாசல்களுக்கும் செல்ல முடியும். ஆரியகுளத்திற்கு மதச்சாயம் தேவையில்லை.

மதங்களை திணிக்க முற்படக் கூடாது அவ்வாறு மதங்களை திணிக்க முற்பட்டால் அந்தியேட்டி அஸ்தியை கரைக்க தமிழ் மக்கள் முற்படுவார்கள். வீணாக இதனை பிரச்னையாக்க வேண்டாம்.

தொல்லியல் என்று சொல்கிறீர்கள். தொல்லியல் சின்னங்களில் ஏன் மதத்தைக் கொண்டு வருகின்றீர்கள். குருந்தூர் மலையை தொல்லியல் என்று மூடிவைத்துவிட்டு பல விடயங்களை செய்து வருகின்றீர்கள்.இவையெல்லாம் எந்த விதத்தில் நியாயம் என்று கேள்வியெழுப்பினார்.

ஆரியகுளம் சேற்றுடன் காணப்படும் போது ஒருவரும் திரும்பி பார்க்கவில்லை. அதன் பின்னர் யாழ். மாநகர சபையின் முயற்சியால், தற்போது அழகாக சீரமைக்கப்பட்டு மக்கள் தமது பொழுது போக்கு நேரத்தை செலவழிப்பதற்காக அங்கு வருகின்றனர்.

ஆரிய குளத்தை அரசு கையகப்படுத்தப் பார்ப்பது எமக்கு தெரியும். இந்த விடயத்தில் யாழ் மாநகர முதல்வரை பணியவைக்கும் செயற்பாட்டுக்கு தமிழ் மக்கள் துணைபோக மாட்டார்கள்” எனவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

## நாட்டில் 20 சதவீத...

இதேவேளை, நட்சத்திர விருந்தகங்களின் உணவு தயாரிப்பாளர்கள் மாற்று வழிகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதுடன், உணவு தயாரிப்புக்காக விறகு அடுப்பை பயன்படுத்துவது பிரதான மாற்றுவழியாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மண்ணெண்ணெய் அடுப்பும் பயன்படுத் தப்படுவதாக தொழில்சார் உணவு தயாரிப்பாளர்கள்சங்கத்தின் தலைவர் தில்ருக்ஷான் தாபரே தெரிவித்துள்ளார். (ஐ)

# கொரோனாவுக்கு 18 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 07

கொரோனா தொற் றால் நாட்டில் நேற்று முன்தினம் 18 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதாரப் பணிப்பாளர் நேற்று உறு திப்படுத்தினார். இதன்படி, 30 - 59 வயது பிரிவில் 5 ஆண்களும், 60 வயதுக்கு மேற்பட்டவர் களில் 7 ஆண்கள், 6 பெண்கள் என 13 பேருமாக 18 பேர் உயிரிழந்தனர். நாட் டின் மொத்த தொற்று பலி 15 ஆயிரத்து 83ஆக உயர்ந்துள்ளது.

## வடக்கு, கிழக்கு...

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கையொப்பமிட்டதைத் தொடந்து தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத்தின் (புளொட்) தலைவர் த. சித்தார்த்தன் ஆகியோரும் நேற்று மாலை கையொப்பமிட்டனர்.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்.) தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் ஆகியோர் தமது கையொப்பங்களை டிஜிற்றல் வடிவில் அனுப்பியுள்ளனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் கொழும்பு சென்றுள்ள மாவை சேனாதிராசா இன்றைய தினம் கடிதத்தில் கையொப்பமிடுவார் என்றும் அறிய வருகின்றது.

இதேவேளை, மலையக, முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் நேற்று தொலைபேசி வழியே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உரையாடினார். இதன் போது, அவர்களுக்கு உள்ள பிரச்னைகள் - சிக்கல்களை புரிந்துகொண்டுள்ளதாக தெரிவித்த அவர், அவர்களின் பங்களிப்பு இல்லாமலே கடிதத்தை இந்தியப் பிரதமருக்கு அனுப்புவதாகவும் கூறினார் என்று தெரியவருகின்றது.

இந்தக் கடிதம் இன்றைய தினமே முழுமையடைந்து விடும் என்பதால், நாளை சனிக்கிழமை இந்திய தூதுவரை இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினர் சந்தித்து கடிதத்தைக் கையளிப்பர்.

கொழும்பு குளோபல் ரவர் ஹோட்டலில் கடந்த 21ஆம் திகதி கூட்டத்தில் தயாரிக்கப்பட்ட வரைவிலேயே வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டு இந்தியப் பிரதமருக்கான கடிதமாக அனுப்பப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எம்.பி. ஒருவருக்கு...

சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதிக்குக் கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலேயே இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து சுசில் பிரேமஜயந்த நீங்கப்பட்டார் என திஸ்ஸ குட்டியாராச்சி நேற்று முன்தினம் ஊட கங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு நேற்று பதிலளித்த சுசில் பிரேமஜயந்த, புலனாய்வுப் பிரிவின் அறிக்கை திஸ்ஸ குட்டியாராட்சி போன்ற ஒரு தனிநபருக்கு எவ்வாறு கிடைத்தது எனவும் கேள்வி எழுப்பினார். இவ்விடயத்தில் அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

புலனாய்வு அறிக்கைகள், முதலில் புலனாய்வு நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பப்படும். அதன்பின்னர் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும். தேவைப்பட்டால், பாதுகாப்பு சபைக்குக் கொடுக்கப்படும். ஆனால், முதல் தட வையாக பாராளுமன்றத்துக்கு வந்துள்ள ஒருவருக்கு அந்தத் தகவல்கள் வழங்கப்படாது” எனவும் தெரிவித்தார்.

## யாழ். சர்வதே...

கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த அவர் செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் யாழ்ப்பாண மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும்முகமாக யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையம் நல்லாட்சி அரசினால் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டது.

வட பகுதியில் உள்ள மக்கள் குறைந்த நேரத்தில் குறைந்த செலவுடன் தென் பகுதிக்கு வந்து செல்வதற்கும் மற்றும் குறைந்த செலவில் தென்னிந்தியாவிற்கு சென்று வருவதற்கும் இந்த விமான நிலையம் திறந்து விடப்பட்டது.

அது வட பகுதி மக்களுக்கு கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பம். ஆனால், இந்த அரசாங்கம் அவ்வாறான சந்தர்ப்பத்தை வழங்க மறுத்து தற்போது விமான நிலையம் மூடப்பட்டுள்ளமை கவலையளிக்கிறது.

எனினும், பொறுத்திருந்து பார்ப்போம். நான் தற்போது அரசியலில் இல்லை அத்தோடு நான் அங்கம் வகித்த கட்சியிலிருந்து விலகி இருக்கின்றேன். எனினும், நான் நினைக்கின்றேன் இந்த அரசாங்கத்தின்மீது மக்கள் வெறுப்பு கொண்டுள்ளார்கள் இந்த அரசாங்கம் விரைவில் வீடு செல்ல வேண்டி வரும். நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த அரசுக்கு எதிராக குரல் கொடுப்பதற்காக ஒன்றிணைந்து ஒரு கூட்டணியாக செயல்படும் காலம் விரைவில் கைகூடும் அது விரைவில் இடம்பெறும் - என்றும் கூறினார். (ஐ-3)

## கடும் எதிர்ப்புக்கு...

பிரதிநிதிகள் ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

திருகோணமலை எண்ணெய் குதங்களை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கு கடும் எதிர்ப்பை தொழிற்சங்கங்கள் வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதியின்...

பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க சபாநாயகரை கோரியுள்ளார். பாராளுமன்ற நடவடிக்கைகள் எதிர் வரும் 18 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட வுள்ளன. இதன் போது ஜனாதிபதி தமது கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தவுள்ளார்.

இந்த உரை தொடர்பாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது கலந்துரையாடி ஜனவரி மாதம் 19, 20 அல்லது 21ஆம் திகதிகளில் ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துமாறு ரணில் விக்ரமசிங்க கோரியுள்ளார்.

## விவசாய...

முக்கிய அமைச்சுகள் மாற்றியமைக்கப்படும் என்று அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காணி அமைச்சராக இருக்கும் எஸ். எம். சந்திரசேன விவசாய அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட உள்ளார் என்றும் கூறப்படுகின்றது. அநுராதபுரம் மாவட்டத்தில் பல கரிம உரத் திட்டங்களை வெற்றிகரமாக நடை முறைப்படுத்திய அவரின் திட்டங்கள் அரசின் சிறப்புப் பாராட்டைப் பெற்றுள்ளன.

புதிய வருடத்தில் புதிய பயணத்தை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அந்த பயணத் திற்கு தூண்டுகோலாக அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைதூரக் கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் பதவிக்கு சுசில் பிரேமஜயந்தவுக்குப் பதிலாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை, முடிவடைந்த பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வு எதிர்வரும் 18ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கூடவுள்ளது. (ஐ)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- வனமகன்,அங்காடித்தெரு திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்